

இதழ் -11
16.10.2020
தூமி
பல்சுவை மின்னிதழ்
சின்ன மகராணியே
மகாபாரதத்தில் நான்
கத்துக்குட்டிகளில் இருந்து
கர்ஜிக்கும் சிங்கங்களான இலங்கை
உலகக்கிண்ணம் '96'
பெருவெள்ளத்திற்கான பயணம்



# அவதானமாய் இருங்கள்..!!!




கொரோனா பதற்றம் உலகை முதல் அலை மற்றும் இரண்டாம் அலை என உலுக்கும் சமகாலப்பகுதியில் கொரோனாவிலிருந்து முழுமையாக விடுதலை பெற்ற நாடாக 'Corona Free' பலகையை மாட்டி தெம்பா இருந்த இலங்கையை செப்டெம்பர்-04 முதல் கொரோனா வைரஸ் மீளவும் பதட்டத்துக்குள் தள்ளியுள்ளது. இந்நிலையில் கடந்த கால அனுபவங்களில் அரசியல்வாதிகள்மீது பாரத்தை போட்டு மக்கள் அசண்டையாய் இருப்பார்களாயின் இம்முறை கோர அழிவு தவிர்க்க முடியாதது ஆகிவிடும்.

மினுவங்கோட கொரோனா வெடிப்பை சமூகப்பிரச்சினையாக உணர்ந்து அதிலிருந்து தற்பாதுகாத்து கொள்ள வேண்டிய பாரிய பொறுப்பு மக்களையே சாருகிறது. இலங்கையில் சுகாதார நடைமுறைகள் இலவசம் என்ற அடிப்படையில் அனைவரும் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்ற போதிலும், உயரளவில் பாதுகாப்பான சுகாதார வசதிகள் இலங்கையில் இல்லை என்பதுவே நிதர்சனமான உண்மையாகும். இலங்கை மக்களை பொறுத்தவரை ஒப்பீட்டளவில் நோய் எதிர்ப்பு சக்தி குறைவானவர்களாகவே காணப்படுகிறார்கள். அபிவிருத்தியடைந்த அமெரிக்க போன்ற வல்லரசு தேசமே கொரோனா சமூகப்பரவலால் மீள முடியாது தத்தளிக்கையில், இலங்கையில் கொரோனா சமூகப்பரவல் ஏற்படுமாயின், அது சார்ந்த இழப்பு மதிப்பிட முடியாது என்பதே யதார்த்தமாகும்.

அச்சத்தை விளைவிப்பது என்பதற்கு அப்பால் இப்பதிவின் உருவாக்கம் மக்களை விழிப்புடன் இருக்கச் செய்வதேயாகும். பிறரை நம்பி இராது கொரோனா வைரஸ் பரவுகை சமூக பிரச்சினை என்பதை இலங்கையர்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து தமது பாதுகாப்பை தாம் உறுதிப்படுத்துவதே சமூகத்திற்கு செய்யக்கூடிய பாரிய பணியாகும்.

துமி பல்சுவை மின்னிதழ்

thumi2016@gmail.com

www.facebook.com/Thumi06

https://thumi-org.github.io



## இவ்விதழில்

# துமித்துளைவ.


04 சித்திராங்கதா

06 சின்ன மகராணியே

07 தேசவழமையின் கீழான முன்வாங்குரிமை

09 கனவுகளைக் கடந்து வா

11 சிவப்பும் நீலமும்

13 மகாபாரதத்தில் நான்

16 வழுக்கியாறு – ஆய்வுத்தொடர்

18 காக்காய் வலிப்பு

20 யார் இவர்கள்

24 என் இதயம் எழுதும் சொல்

26 குறுக்கெழுத்துப்போட்டி

29 குடாநாட்டின் சுற்றுலா – ஆய்வுத்தொடர்

31 திரைத்தமிழ் – ஹரிச்சந்திரன்

34 தமிழர்களின் எதிர்காலம்

35 சிங்ககிரித்தலைவன்

37 பலிபீடம்

38 இலங்கை உலகக்கிண்ணம் 1996

**ஆடிய அழகா!**

நல்லை வீரமாகாளி சந்நிதியில் அன்று அதிசயம் ஏதும் நிகழ்ந்ததாய் வரலாற்றில் வார்த்தைகளில்லை. ஆனால் அந்த வசீகரப் பிரளயத்தை இந்த உலகம் எப்படித்தான் தாங்கியதோ தெரியவில்லை.

வாசித்த நெஞ்சங்களின் காத்திருந்த பொறுமைக்கு தலைவணங்கி மேடையில் வந்து நிற்கிறது பேரழகு.

சித்திராங்கதா.




காதால் கேட்டே மயங்கியவன் வருணகுலத்தான். இப்போது கண்களால் காண்கிறான்.

எத்தனை யுகங்கள் காத்திருந்த தேவதை இத்தனை நாள் இத் திருநாட்டிலா இருந்தாள் என உள்ளத்தில் தோன்றிய எண்ண அலைகளை அவன் பெருமூச்சு உலகிற்கு உணர்த்தியது.

ஆடலழகியின் அதிசயங்கள் மேடையில் தொடங்கின. காற்றிடைவெளிகளில் நிறைகின்ற கானம் ஒன்று அவள் உதடுகளிலிருந்து புறப்பட்டு வந்தது. அழகு, ஆடல், பாடல், இசை எல்லாம் ஒரே உருவத்திற்குள். ஆம். உண்மையில் அது ஒரு வசீகரப்பிரளயம் தான். இந்த உலகம் அதைத் தாங்கித் தான் வந்திருக்கிறது.

ஆடல் 11

கயிலையிலே ஒருமுறை நடராஜப்பெருமான் நாட்டியம் ஆடுகிறார். யாருக்காக ஆடுகிறார்? காதல் ராணி உமையவள் காண்பதற்காக மட்டுமே ஆடுகிறார். தம்பெருமான் ஈசனின் திருநாட்டியம் காண்கின்ற தேவியின் கண்கள் கொண்ட களிப்பை- பாக்கியத்தை யாரேனும் கண்டிருக்க முடியுமா?

கண்டார்கள்.

அன்று அந்த அவையிலிருந்த அத்தனைபேரும் கண்டார்கள். சித்திராங்கதா காட்டினாள். உமையவள் கண்கள் கொண்ட கோலங்களை எல்லாம் அபிநயமாய் மேடையிலே கொண்டு வந்தாள்.

"கூடிய லயம் ஜதி பிழையாமை
கொடையிடை உமையவள் காண
ஆடிய அழகா அருமறைப் பொருளே
அங்கணா எங்குற்றாய் என்று
தேடிய வானோர் சேர் திரு முல்லை
வாயிலாய் திருப்புகழ் விருப்பால்
பாடிய அடியேன் படுதுயர் களையாய்
பாசு பதா பரஞ் சுடரே"

சுந்தரமூர்த்தியார் மொழிந்த கவிவரிகளிற்குள் ஆடிய அழகனின் நாட்டியக்காட்சியை உமையவள் கண்களினூடு உலகிற்கு உணர்த்தினாள். தேவியின் விழி இமைகளின் துடிப்பு அவையோரின் இதயத்துடிப்போடு கலந்து நிற்க, எல்லோரும் நிலைமறந்து சித்திராங்கதாவை வியந்து நோக்கினர்.

உமை பாக்கியம் பெற்றவள் என எல்லோரும் நம்பினார்கள். நம்ப வைத்தாள். என்ன பாக்கியம்? காதல் நாயகன் கண்முன் நிற்கிறான். காதல் பொங்க களிப்பு மிகுதியில் நாட்டியம் ஆடுகிறான். அவள் கண்கள் அதை காண்கின்றன. இது எத்துணை பாக்கியம் என்று காதலன் திருவுருவை இதுவரை கண்ணால் கண்டிராது மனதால் வடித்துருகும் மங்கையின் மனம் உணர்ந்தோரே அறிவர். அப்படியொரு பேதையை தனக்குள் அடுத்ததாய் அழைத்து வந்தாள் சித்திரங்கதா. இதுவரை கண்டிராத தன் தலைவனை நினைந்துருகும் காதல் நாயகியின் துர்ப்பாக்கியத்தை அவள் மேடையிலே கொண்டு வந்து அழகியலாக்கினாள்.



தலைவன் நாமம் மட்டுமே முதன்முதலாய் கேட்டறிந்த தலைவி பலர்

உரைக்க அவனது நன்மைகளையும் அடுக்கடுக்காய் கேட்கிறாள். முகம் அறியாத் தலைவனையே தன் சிந்தனை முழுவதிலும் நிரப்பிக்கொண்ட ஒரு தலைவியாய் சித்திராங்கதா மாறினாள். அப்பர் பிரானின் அழகிய வரிகளை அபிநயமாய் மாற்றினாள்.

"வண்ணமும் வடிவும்
சென்று கண்டிலள்
எண்ணி நாமங்கள்
ஏத்தி நிறைந்திலள்
கண்ணுலாம் பொழில்
சூழ் கழிப்பாலை
அண்ணலே அறிவான்
இவள் தன்மையே"

அண்ணல் அறிந்தாரோ யாரறிவார்? ஆனால் அவன் அறிந்தான். இமைக்கின்ற கணத்தையும் வீணாக்காது மேடையில் பொங்கி வழிந்துகொண்டிருந்த பேரழகை பருகிக் கொண்டிருந்த வருணகுலத்தான் கற்பனையில் பல எண்ணங்கள் வந்து போனது.

திருநாமம் மட்டுமே அறிந்த நாயகனை நினைந்துருகும் கன்னியாய் சித்திராங்கதா ஏன் அபிநயம் காட்டினாளோ தெரியாது. ஆனால் அது வருணகுலத்தானிற்கு இன்னும் போதை கூட்டியது.

'இது தனக்கான விழா, இந்த விழாவின் நாயகன் நான்'
என இனிக்க இனிக்க அவன் கற்பனைகளால் கோட்டை கட்டிக்கொண்டிருந்தான்.

'அரங்கேற்றத்திற்கு முன்னர் ஆடவே மறுத்தவள் வீரத்தளபதி பற்றி கூறியதும் தான் ஒரு வகையில் சம்மதித்தாள்'
என அவள் தந்தை பெருவணிகர் எச்சதத்தர் முன்னிரவு கூறிய வார்த்தைகளை இந்நேரம்

தீவாகரன்



எண்ணிப்பார்த்துப் பொருத்திக் கொண்டான். அவன் ஆழ்மனதில் பல புதிய கேள்விகள் பிறந்தன. ஆனால் அவைக்கு அவன் விடை தேட விரும்பவில்லை. கேள்விகளே இனிமையானவை. அதன் இனிமையை முழுவதுமாய் நுகர விரும்பினான்.

இதோ! அவள் மேடைக்கு இறுதி வணக்கம் கூறுகிறாள். இனி விடைபெறப்போகிறாள். பிறகு என்ன செய்வது? வருணகுலத்தான் அதை கடுமையாக எதிர்ப்பது போல் தன்னிலை மறந்து தலையாட்டினான். நல்லவேளை. அவன் முகத்தை அந்நேரம் யாரும் பார்க்கவில்லை.

சந்தன மேடையை விட்டு விலகிச்சென்றது பேரழகு. தம்மை மறந்திருந்த அவையோர் தெளிவுற்று ஓசை எழுப்ப சில கணங்கள் தேவைப்பட்டது. ஏக காலத்தில் மக்களின் கரவோசை விண்ணை பிளந்தது.

தேங்கிய சங்கடங்களை மறந்து சங்கிலியன் சந்தோசமடைந்தான். ஆனால் வருணகுலத்தான் புதிய சங்கடத்தில் புதைந்து போனான். ஆனாலும் அவனுக்கு அது ஒரு சந்தோசமான சங்கடம்.

நிகழ்வு முடிந்ததும் எல்லோரும் தங்கள் பாக்கியத்தை எண்ணிக்கொண்டே விடைபெற்றுச் சென்றனர். ஐயாயிரம் சேனை வீரர்களும் கோப்பாய் அரசமாளிகை நோக்கி விரைந்து கொண்டிருந்தனர்.

வாள் பெற்ற வருணகுலத்தான் புதுத்தெம்பு பெற்றிருந்தான். ஆனால் அவன் உற்சாகத்தை யாரிடம் பகிர்வது? அவன் உணர்ச்சிகளின் அருகில் அங்கு யாருமே இருக்கவில்லை. ஒன்றே ஒன்று அருகில் அவனுக்காக காத்திருந்தது.

அஸ்வதமங்கலம். அது தன் தலைவனின் உணர்ச்சிகளை புரிந்து கொண்டாற் போல வாஞ்சையோடு வருணகுலத்தானை பார்த்து நின்றது. விரைந்து வந்து அஸ்வதமங்கலத்தில் பாய்ந்து ஏறி அதிவேகமாக பயணிக்க தொடங்கினான்.யாழ் வீதிகளில் ஏதோ ஒரு சுகந்தத்தை நோக்கி அஸ்வதமங்கலம் அவனை அழைத்துச் செல்கிறது.

ஆனால் அது எவ்வளவு அபாயகரமானது என்று அந்த வாயில்லா ஜீவன் கூட அப்போது அறிந்திருக்கவில்லை.

*பயணம் தொடரும்...*

# அட்டைப்படம் பற்றி...

**ஒளிப்படம் : கோபாலசர்மா ரகுவரன்**



உயர உயரப் பறந்தாலும் சிறிது நேர ஓய்வென்பது பருந்துக்கும் தேவைதான் என்று சொல்கிறது இந்த இயற்கைச்சித்திரம். கண நேரத்திற்குள் காணாமல் போய்விடுகின்ற ஆயிரம் விசித்திரங்களைக் கொண்ட இயற்கையின் ரம்மியத்தை காலமுள்ள வரை கண்டுகளிக்கச் செய்யும் புகைப்பட வித்தை அதிசயிக்கத்தக்கது தான்.

ரசிக்கும் சீமானே!!

# சின்ன மகராணியே



விலங்குகளில் ஆண் விலங்குகள் வலிமையானதாகவும் பெண் விலங்குகள் மென்மையானதாகவும் இயற்கை படைத்திருக்கிறது. விலங்குகளில் அழகானதும் ஆண் விலங்குகள் தான். ஆண் சிங்கம், ஆண் மயில், ஆண் யானை என்று அழகும் வலிமையும் ஒரு சேர ஆணிற்கு வழங்கிய இயற்கை, பெண்மையை பாதுகாக்கும் கூடுதல் பொறுப்பையும் ஆணிற்கு வழங்கியிருக்கிறது.

இ.தனிஷ்ரன்

மனிதன் இதற்கு நேர்எதிர். மனிதர்களில் அழகு பெண்மைக்குரியது.

*"அழகு என்பது ஆண்பாலா பெண்பாலா என்பதில் எனக்கு சந்தேகம் தீர்ந்தது அழகு என்பது நிச்சயம் பெண் பாலடா"*

விலங்குளின் வழியில் வந்தவன் என்பதால் உடலமைப்பில் பெண்ணை விட ஆண் வலிமையானவன் தான். ஆனால் அவனது மனவலிமை என்பது தான் நேசிக்கும் பெண்மையிடம் மண்டியிட்டு கிடக்கும். அவன் மனம் எப்பொழுதுமே பற்றிக்கொள்ள ஆதாரமொன்றை தேடுவது. ஒரு ஆண் வீரனாவதும் சிறந்த கல்விமான் ஆவதும் பெரும் செல்வந்தனாவதும் அந்த "அவள்" அவனை கையாளும் விதத்தில் தங்கியிருக்கிறது.

*"வெற்றி மீது வெற்றி வந்து என்னை சேரும் அதை வாங்கி தந்த பெருமை எல்லாம் உன்னை சேரும்"*

'ஒரு ஆணின் வெற்றிக்கு பின்னால் நிச்சயம் ஒரு பெண் இருப்பாள்' என்ற பொதுமொழி அவள் ஆதாரம் இல்லாமல் இவன் அசைவுகள் சாத்தியமில்லை என்ற உண்மையிலிருந்து வந்தது. இன்னும் சொன்னால் சக்தி இல்லையேல் சிவம் இல்லை.

இவன் தேடும் இந்த ஆதாரம் அம்மா, மனைவி, மகள் என பருவங்கள் மாறும் போது பந்தத்தின் படிநிலைகள் கடந்து நீளும்.

அம்மா என்பவள் இவனை எல்லை இல்லாது அன்பு செய்பவள். சுயநல ஆண்மனம் தாயை போல் தன்னை அன்பு செய்ய, அம்மா போல் தனக்காக உருகி வழிய, தன்னை ஒப்புக்கொடுக்க யௌவனத்தை அடைகையில் இன்னொரு பெண்ணை தேடும். "தாய்க்கு பின் தாரம்" என்பார்கள். அதன் அர்த்தம், திருமணத்தின் பின் மனைவியே ஆடவனுக்கு தாயாகவும் இருக்க வேண்டும் என்பது.

அம்மா போல அன்பு செய்ய காதலியை தேடிக்கொண்டாலும், அவள் அடிப்படையில் இன்னொரு பெண். காதல் அன்பில் காமமும் கலந்தே இருப்பதாலும் இரத்த வழி பந்தம் இல்லாததாலும் மனைவி என்பவள் தனித்துவமான அன்பிற்குரியவள். ஆனால் தன் தாயின் சாயலை ஆண் உணருவது தான் பெற்ற மகளிடம் தான்.

*//சிற்றாடை கட்டி அவள் சிரித்த போது என்னை பெற்றவள் சாயல் என்று பேசிக்கொண்டேன்//*

தன் பெண் தத்தித்தவழும் வயதிலேயே, அவள் கண் அம்மா மாதிரியா பேச்சு அம்மா மாதிரியா மூக்கு அம்மா மாதிரியா என்று



தேட ஆரம்பித்துவிடுவான். அதே நேரம் மனைவியின் உறவு வழி அடையாளங்கள் இருந்துவிட கூடாது என்ற ஏக்கம் வேறு இருக்கும். தன் தாயே தனக்கு மகளாய் வேண்டும் என்ற மகனின் வாஞ்சையின் பிரதிபலிப்பு அது.

"உனக்கே ஓர் தொட்டில் கட்டி
நானே தாயாய் மாறிட வேண்டும்"

தான் முதல் காதல் செய்த தாயின் சாயலிலே தன் மகளை கொஞ்சும் ஆண்மனம். தன்னுடைய முதல் ஹீரோவாய் ரசித்த தன் தந்தையின் சாயலிலே தன் மகனை கொண்டாடும் பெண்மனம். இரண்டும் ஒன்றோடொன்று பிணைந்தது.

//வா வா என் தேவதையே
பொன்வாய் பேசும் தாரகையே
பொய் வாழ்வின் பூரணமே
பெண்பூவே வா//

தன் தாயே மறுபடியும் பிறந்ததாய் கிறங்கும் ஆண், அவளுக்கு என்னவெல்லாம் வேண்டுமோ அவை அனைத்தையும் தன்னை தேய்த்து செய்து கொடுக்க ஏங்குவான்.




//வான் மிதக்கும்
கண்களுக்கு
மயில் இறகால்
மையிடவா
மார்புதைக்கும்
கால்களுக்கு
மணி கொலுசு
நான் இடவா//

தாய், மனைவி, மகள் என்று பெண்மையில் பித்துக்கொள்ளும் ஆண்மனம், தாய் செய்யும் அத்தனையையும் எப்படி கேள்வியின்றி பிரதியெடுத்துக்கொண்டதோ தன் காதலி செய்யும் சிறுபிள்ளைதனங்களில் விழுந்து விழுந்து எப்படி காதலில் ஊறிக்கிடந்ததோ அதே போலவே தன் மகளின் மழலை சேட்டைகளை ரசித்துக்கொண்டே அவளை அடைகாக்க தன்னை தயார்படுத்திக் கொள்ளும்.



//செல்வ மகள்
அழுகை போல்
ஒரு சில்லென்ற
சங்கீதம்
கேட்டதில்லை
பொன் மகளின்
புன்னகைப்போல்
யுகபூக்களுக்கு
புன்னகைக்க
தெரியவில்லை
என் பிள்ளை
எட்டு வைத்த
நடையைப்போல
எந்த இலக்கண
கவிதையும்
நடந்ததில்லை
முத்துக்கள் தெறிக்கின்ற மழலை போல ஒரு
முந்நூறு மொழிகளில் வார்த்தை இல்லை//

தன் மகளுக்கு இணை வைக்க எதுவுமே இல்லை என்று பறந்து திரியும் மனம்,அவளோடு சேர்ந்து மழலையாகவே மாறிவிடும்.

//தெய்வ மகள் தூங்கையிலே
சில தெய்வங்கள் தூங்குகின்ற
அழகை கண்டேன்//

"நீ தூங்கும் போது உன் நெற்றி மீது
முத்தங்கள் வைக்கணும்
போர்வைகள் போர்த்தி போகாமல் தாழ்த்தி
நான் காவல் காக்கணும்
எல்லோரும் தூங்கும் நேரம்
நானும் நீயும் மௌனத்தில் பேசணும்"

தன்னவளின் கருவிலே தன் மகள் உருக்கொண்ட நாளிலிருந்தே தன் மகளை மனதிலே தாங்க தொடங்குவான் தந்தை. தாய் பத்து மாதம் வயிற்றில் சுமக்க





இவன் பத்து மாதம் தன் மனதில் சுமந்து பெற்றெடுத்த பிள்ளையை கொஞ்சும் போது,

*//தந்தைக்கும் தாய் அமுதம் சுரந்ததம்மா*
*என் தங்கத்தை மார்போடு*
*அணைக்கையிலே//*

அவள் வளர வளர தன்னை அவளிடம் ஒப்புவித்து உச்சிமோர்ந்து ஆனந்தம் கொள்கிறான் அப்பன்.

*"எனக்கென உன்னை தந்து*
*உனக்கிரு கண்ணை தந்து*
*அதன் வழி எனது கனா காணச்சொல்லியதே*
*நீ அடம் பிடித்தாலும்*
*அடங்கிப்போகின்றேன்*
*உன்மடி மெத்தை மேல் மடங்கி*
*கொள்கின்றேன்"*

அவளை தைரியம் மிக்கவளாக, தன்னம்பிக்கை நிறைந்தவளாக, கல்வியில் கலைகளில் சிறந்தவளாக, ஆணை வெல்லும் வல்லமை உள்ளவளாக வளர்க்க வேண்டும் என்று கனவு காண்பான் இவன்,

*//மேல்நாட்டு ஆடை கட்டி நடந்த போது*
*இவள்*
*மீசையில்லாத மகன் என்று சொன்னேன்//*

இவன் எவ்வளவு தான் பாசத்தை கொட்டி வளர்த்தாலும் ஒரு நாள் அவள் இன்னொருத்தனுக்கு சொந்தமாகப் போகிறவள். ஆனால், அவளை பள்ளியில் தனியாக விடவே பதறுபவன் இவன்.



*//பிள்ளை நிலா பள்ளி செல்ல*
*அவள் பையோடு*
*என் இதயம் துடிக்கக் கண்டேன்//*

காலமோ அவளை இவனிடம் கொடுத்த நாளிலிருந்தே ஒரு நிரந்தர பிரிவுக்கான ஒத்திகைகளையும் கூடவே அரங்கேற்றும். தன் மகள் தன் தாய் என்று கொஞ்சியவள் பருவமடையும் போது, அவள் இன்னொரு பெண் என்ற திரை விழுகிறது.

*//பெண் பிள்ளை தனியறை புகுந்ததிலே*
*ஒரு பிரிவுக்கு ஒத்திகையைப் பார்த்துக்*
*கொண்டேன்//*

அன்றிலிருந்து அதுவரை வளர்ந்து வந்த பாசம் அப்படியே தேங்கி நிற்க, பிரிவுக்கான அரங்கேற்றங்கள் அடிக்கடி நிகழ்ந்து கொண்டிருக்கும். நிரந்தர பிரிவுக்காக இவனை தயார்படுத்தும் படலம் ஆரம்பமாகும். அவளுடனான இவனின்



தூரம் அதிகரிக்க ஆரம்பிக்கும். ஒரு நாள் இன்னொருவனே வாழ்வென்று அவனோடு சென்று விடுவாள் மகள். இவனோ,

*//மூங்கில் விட்டு சென்ற பின்னே*
*அந்த பாட்டொடு மூங்கிலுக்கு உறவு என்ன*
*பெற்ற மகள் பிரிகின்றாள்*
*அந்தப் பெண்ணோடு தந்தைக்குள்ள உரிமை*
*என்ன*
*காற்றைப் போல் ரெயில் வந்து கடந்து போன*
*பின்னும்*
*கை காட்டி மரம் கொள்ளும் தனிமை என்ன*
*மாயம் போல் கலைகின்ற மனித*
*வாழ்க்கையில்*
*சொந்தங்கள் சொல்லிச்செல்லும் சேதி என்ன*
*பாசத்தின் ஊடாக ஞானம் கொள்ள*
*படைத்தவன் புரிகின்ற சூழ்ச்சி என்ன?//*




அ.திருமருகன்
மாணவன்
இலங்கை சட்டக்கல்லூரி

## தேசவழமையின் கீழான முன்வாங்குரிமை (Pre - emption under the Thesawalamai)

முன்வாங்குரிமை தொடர்பிலான சட்டங்கள் பண்டைய சட்ட ஏற்பாடுகளில் காணக்கூடியதாக இருக்கிறது. உலகின் பல்வேறு இடங்களில் இந்த சட்டங்கள் காணப்பட்டுள்ளது. உதாரணமாக ஹமுராபிக் கோவை போன்றவற்றில் காணப்படுகின்றது.

**இந்த சட்டங்களானது பல்வேறுபட்ட நாகரிகத்தை சார்ந்தவர்களும் பல்வேறுபட்ட இனக் குழுமங்களின் பாவனையில் காணப்படுகின்றது. உதாரணமாக யூதர்களும் இந்த முன்வாங்குரிமை எண்ணக்கருவை கொண்டிருக்கின்றார்கள். இந்த யூதர்கள் பாபிலோனியர்கள் இடமிருந்து முன்னுரிமை தொடர்பான சட்டத்தினை பெற்றிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.**



முன்வாங்குரிமை தொடர்பான ஏற்பாடுகள் இந்தியாவினுடைய பல்வேறுபட்ட வழக்காற்று சட்டங்களில் காணப்படுகின்றது.

எந்த சமூகத்திலுள்ள குடும்பத்தில் அசையாத ஆதனம் பொதுமையாக உள்ளதோ அந்த சமூகத்தில் முன்வாங்குரிமை அறியக்கூடியதாக இருக்கும். அத்தகைய சமூகமொன்றில் கூட்டு பங்குதாரர்களாக குடும்பத்தின் உடைய எல்லா உறுப்பினர்களும் காணப்படுவதோடு அத்தகைய முன்வாங்குரிமையின் நோக்கமானது காணி வெளியாட்களுக்கு பாராதீனப் படுத்தப்படுவதை தடுப்பதாகும்.

இலங்கையில் 1947 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க தேசவழமை முன்வாங்குரிமை கட்டளைச் சட்டமானது தேசவழமையினால் ஆளப்படும் காணிகள் தொடர்பில் முன்வாங்குரிமை சட்டத்தை திருத்துவும் கூட்டிணைக்கவும் என்ற காரணங்களுக்காக கொண்டுவரப்பட்டது.

தேசவழமை முன்வாங்குரிமை கட்டளைச் சட்டத்தின் உடைய சட்ட ஏற்பாடுகளின்படி முன்வாங்குரிமையானது இரண்டு வகுப்பு ஆட்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்படுகிறது. அவையாவன

***1. விற்கப்படவுள்ள சொத்தின் விற்பனையாளர்கள் உடன் கூட்டு சொந்தக்காரர்களாக உள்ள ஆட்கள்***

***2. விற்பனையாளர் மரணசாசனம் இல்லாது இறக்கும் பட்சத்தில் அதன் வழியுரிமையாளர்களாக உள்ள ஆட்கள்.***

இக் கட்டளைச் சட்டத்தின் கருத்தின்படி "வழியுரிமையாளர்" என்ற சொற்பதம் வழி உரிமையின் மூன்றாம் சந்ததி வரையிலான பின்னறுபர்கள், முன்னோர்கள் மற்றும் ஒரே வம்சத்தில் பிறந்தவர் கருதுகின்றது.

முன்வாங்குரிமையானது விற்கப்படவுள்ள சொத்தின் பிரிக்கப்படாத பங்கு அல்லது அக்கறை கொண்டுள்ள அசையாத சொத்துகளுக்கு மட்டுமே பிரயோகிக்கப்படும். எனவே

**தேசவழமையின் கீழான முன்வாங்குரிமையானது சொத்து தனித்த முழுமையான சொந்தத்திலேயே வைத்திருக்கப்படும் இடத்து பிரயோகிக்க முடியாது.**

இதன் விளைவாக ஒரு காணியை தனித்த சொந்தத்திலேயே வைத்துள்ள ஒருவர் விற்க எண்ணுகின்ற போது அயலவர்களாக உள்ள காணிக்காரர் ஒருவருக்கு இத்தகைய முன்னுரிமை பிரயோகிக்கபட முடியாது.

கூட்டுச் சொந்தத்திலுள்ள போது கூட்டுச் சொந்தக்காரர்களில் ஒருவர் தனது பங்கினை விற்க எண்ணுகின்ற போது மற்றைய கூட்டுச் சொந்தக்காரர் முன்வாங்குரிமை பிரயோகிக்க முடியும் இங்கு முன்வாங்குரிமை என்பது முன்மொழிவு செய்யப்பட்ட விலையில் அல்லது சந்தைப் பெறுமதியில் அந்த காணியை வாங்குவதற்கு மற்ற எல்லா நபர்களிடமிருந்து முன்னுரிமையை பெறுவது ஆகும்.

தேசவழமை முன்வாங்குரிமை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் முன்வாங்குரிமை உரித்து அல்லாதவர்களுக்கு அசையாத சொத்துகள் விற்பதற்கான எண்ணம் அல்லது முன்மொழிவிற்கான அறிவித்தலானது பிரசித்த நொத்தாரிசு முன்னிலையில் விற்பனையாளரால் கையெழுத்திடப்பட வேண்டும். அவ் அறிவித்தலானது மூன்று பிரதிகளில் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

இவ் அறிவித்தலானது வருங்கால உத்தேச கொள்ளவனவாளரினால் முனைவு செய்யப்பட்ட உள்ளபடியான விலையை வெளிப்படுத்த வேண்டும்.
ஆயினும் வருங்கால உத்தேச கொள்வனவாளரின் பெயர் விபரங்களை வெளிப்படுத்த வேண்டிய அவசியமில்லை.

அறிவித்தலின் சான்றுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று காணி எந்த உள்ளூர் அதிகாரசபையின் எல்லையில் அமைந்துள்ளதோ அந்த உள்ளூர் அதிகார சபையின் விடயத்திற்கேற்ப மாநகர அல்லது நகர முதல்வருக்கு அல்லது பிரதேச சபைத் தலைவருக்கு விற்பனையாளரின் அனுப்பப்படுதல் வேண்டும்.

இவ்வாறு சான்றுதிப்படுத்தப்பட்ட அறிவித்தலின் பிரதி பெறப்பட்டதன் மீது அத்தகைய விபரங்களை பதிவு செய்த பின்னர் அறிவிப்புப் பலகையில் இடுதல் வேண்டும். அறிவிப்புப் பலகையில் விடுதலை ஆனது அறிவிப்பின் வெளியீட்டுக்கு முற்தான சான்றாக இருக்க வேண்டும்.

அறிவிப்புப் பலகையில் இடப்பட்டதிலிருந்து மூன்று வாரங்களுக்குள் முன்வாங்குரிமை கொண்டுள்ள எவரேனும் அதற்கான பெறுமதியான பணத்தைச் செலுத்தி அதனை வாங்க முடியும் அல்லது அதனை வாங்குவதற்கான உடன்படிக்கை செய்ய முடியும்.

அறிவிப்பு வெளியிடப்பட்டதில் இருந்து மூன்று வார காலப்பகுதியினுள்ளே நிறைவேற்றப்படும் எந்த சொத்து மாற்றமும் வெற்று வெறிதானதாதல் வேண்டும் என்பதுடன் சட்டத்தில் எந்த பயனையும் பெறுதலாகாது.

தேசவழமையின் கீழான முன்வாங்குரிமை தொடர்பாக பல்வேறுபட்ட நீதிமன்ற தீர்ப்புகளை நாங்கள் எடுத்து நோக்கலாம்.

சுப்பையா எதிர் தம்பையா வழக்கில் கொள்வனவாளர் யாழ்ப்பாணத்தில் பிறந்தவருமல்ல வாழ்ந்தவரும் இல்லை. எனவே தேசவழமை மாட்டார் என்ற வாதம் உருவாக்கப்பட்ட போது நீதிமன்றம் தனது தீர்ப்பில் கொள்வனவாளர் தேசவழமையினால் ஆளப்படாத போதிலும் வடக்கு மாகாணத்தில் உள்ள காணி விற்பனை மீது தேசவழமை கட்டுப்பாட்டை விதிக்கிறது என்றும் அத்தகைய கட்டுப்பாடு அத்தகைய காணி வாங்குபவர் எவராக இருப்பினும் அவரது உரிமையை பாதிக்கின்றது என்று கூறப்பட்டது.

**சாரல் தூறும்..............!!!!!!**

# கனவுகளைக் கடந்து வா...

மணக்கனவுகளைக் கடந்து -உன்
மனக் கதவுகளை திறந்திடு ...

வானுயர்ந்த மாளிகைக் கனவுகளை தகர்த்தெறி ,
உயரே பறந்த கல்பனா சவ்லாவாய் வாழ்ந்திடு ...

காண்போரை கவரும் அழகுக் கனவுகளை தகர்த்தெறி
செவிவழி கேட்போரும் வியக்கும்
மேரி கியூரியாய் வாழ்ந்திடு ...

அன்பிற்காய் ஏங்கும் காதல்க் கனவுகளை தகர்த்தெறி ,
அனைவரும் போற்றும் அன்னை தெரேசாவாய்
வாழ்ந்திடு ...

போகும் பாதை முழுதும் தொடரும் துன்பக்
கனவுகளை தகர்த்தெறி ,
நெஞ்சம் முழுதும் உறுதி கொண்ட
அஞ்செலா மேர்ககலாய் வாழ்ந்திடு ...

கனவுகளைக் கடந்தும் வாழ்வதற்கு ,
கடமைகளுடன் பிணைந்த வாழ்க்கை
காத்திருக்கையில் ...
காணும் கனவுகளும் கொஞ்சம்
சாதனைகள் புரியட்டுமே ..

கண்களால் சிறைப்படுத்த
காத்திருக்கிறது வானம் ...
கால்களால் அளந்திடத்தானே
விரிந்திருக்கிறது பூமி ...

வீண் கனவுகளைக் கடந்து வா ...
வானம் வசப்படட்டும் உன் கைகளில் தோழி ....




மாதவி உமாசுதசர்மா

# சிவப்பும் நீலமும்

கோபி பிரகாஷ் திருக்குமரநாதன்

ஐபில் நேரத்துல சிவப்பையும் நீலத்தையும் பார்த்தா நம்ம மைண்டு நேரா ஆர்சிபி பக்கமும் மும்பை பக்கமும் தான் போகும் ஆனா இன்னைக்கு நாங்க பார்க்க போறத சிவப்பும் நீலமும் அது இல்லை இந்தவார துமி மின்னிதழ்ல்ல நாம அலச போறது *Red Ocean Strategy & Blue Ocean Strategy* அ பத்தி தான்.சரி அதென்னா பொல்லாத *Strategies?* என்ற உங்கள் கேள்விக்கணைகளுடன் இவ்வார மறுபக்கத்திற்குள் நுழைவோம்.



முதலாவதா சிம்பிளா ரெண்டையும் பத்தி பார்ப்போம். நீங்க மீன்பிடிக்க கடலுக்கு போறிங்க. அங்கதான் அந்த நகரத்தோட மொத்த மீன் வியாபாரிகளும் இருக்காங்க. போட்டியை பத்தி சொல்லவே தேவை இல்லை.வேற வழி இல்லாம நீங்களும் கும்பலோட கோவிந்தாவா போய் மீன்பிடிக்கிறிங்க. நீங்க வேற தொழிலுக்கு புதுசு. போதுமான வளமும் இல்லை. அதால நீங்க நினைச்சமாறி உங்களால மீன் பிடிக்க முடியல. இதுதான் *Red Ocean Strategy.* போட்டி இருக்கிற இடத்தில் போயி சிக்ஸர் அடிக்கிறது. அதாவது மும்பை சிஸ்கேவ போட்டு பொளக்கிற மாறி.



அடுத்தது *Blue Ocean Strategy*னா என்னனு பாத்திங்கனா இப்ப நாம மீன்பிடிக்க ஊரவிட்டு கனதூரம் இருக்க கடல்பரப்புக்கு வந்திடுவோம்.அதாவது கொஞ்சபேர் இருக்க இடத்தில் மீன்பிடச்சா, நமக்கு கொஞ்சமாச்சும் மாட்டாதா என்ட நம்பிக்கைலதான். *So* நாம இன்னும் கொஞ்சம் வலைகள் நவீனரக படகுகளை வேண்டி போட்டு அதுக்குள்ள நம்மள பெரிய ஆள் ஆக்கி எலே நானும் ரௌடி தான் *Mode*ல சுத்தலாம். அதாவது போட்டியே இல்லாத இடத்தில சிக்ஸர் அடிச்சு நம்மள பெரிய ஆளாக் காட்டிக்கிறது. சொல்லபோன நம்ம சிஸ்கே இந்த வருஷம் பஞ்சாப்போட கம்பேக் கொடுத்தமாறி.



ரைட்டு ஐபில்ல விட்டு வெளிய வருவோம். இந்த *Blue Ocean Strategy* இருக்குதானே சும்மா லேசுப்பட்ட விஷயம் இல்லை கொஞ்ச காலத்துல *Demand* கூடினா அதுவே *Red Ocean Strategy*யா விஷ்வரூபம் எடுக்கும். அப்படி நடந்த ரெண்டு விஸ்வரூபத்த பத்தி நாம கொஞ்சம் விவரமா பார்ப்போம்.

முதலாவது *Netflix.* இந்த கொரோனா காலத்தில இதுக்கு தனி அறிமுகம் எழுத வேண்டிய தேவையே இருக்காது என்பதால் நேரா விஷயத்துக்கு வருவோம். *2017* நிலவரப்படி *Netflix*ல *109* மில்லியன் உறுப்பினர்கள் *190* நாடுகள்ல இருக்காங்களாம். ஆனா இதுக்கு எல்லாம் விதை *1997*ல *Reed Hastings* போட்டது. ஆரம்ப காலத்துல *Monthly Subscription* நிபந்தனைல

மறுபக்கம்




*DVD*க்கள இரவல் எடுத்து *Netflix* வியாபாரம் பண்ண ஆரம்பிச்சது. ஆனா திடீரெண்டு நேரம் பிந்தி *DVD* கொடுத்ததால அதுக்கு தண்டப்பணம் கட்ட வேண்டி வரக்குல தான் *Reed Hastings*கு ஒரு யோசனை வருது. அந்த நேரத்துல இணையமும் அசுர வளர்ச்சி எடுக்க ஏன் "நாமளே *Offer* கொடுத்து *Movies & Series*அ *Stream* பண்ணக்கூடாது" என்ட *Blue Ocean Strategy*அ கையில எடுக்கிறாங்க. *2013*ல அவங்களே *100* மில்லியன் செலவுல *House of Cards* என்ட சீரிஸ் எடுத்து *Leagal*ஆ அத அவங்கட *Platform*ல மட்டும் விடுறாங்க. இந்த *Move* தான் இன்னைக்கும் அவங்க ராஜாவா இருக்க அடியெடுத்துக் கொடுத்திச்சு. அந்த *Move* ரொம்பவே ரிஸ்கா இருந்தாலும் அவங்களோட துணிச்சலுக்கு வெகுமதியா *8 Emmy Series Awards*கு *Nominations* உம் மூன்று மடங்கு இலாபமும் கிடைக்குது. அப்புறம் என்ன இந்த நீலச்சமுத்திரத்தில புதுசா *Boats*களை வேண்டிப்போட்டு அதாவது படங்களையும் தயாரிக்க வெளிக்கிட்டு இன்னைக்கு சிவப்பு சமுத்திரமா விஷ்வரூபமெடுத்திட்டாங்க. இந்த துணிச்சலான *Move*க்கு பரிசா *2017 Forbes* நாளிதழில்ல *Most innovative Companies* வரிசைல *Netflix*கு அஞ்சாவது இடம் கிடைக்குது. இன்னைக்கு *HBO & Amazon* இதே மாதிரி சேவைகள் வழங்கினாலும் அதுக்கு முதலாளி *Netflix*தான்.

| | |
|---|---|
| *Stores, DVDs* என்பன நீக்கப்பட்டன. | உரிமம் பெறும் செலவு குறைக்கப்பட்டது. |
| எண்ணிலடங்கா திரைப்படங்களை பார்க்கும் வசதி உருவாக்கப்பட்டது. | இலகுவாக பணம் செலுத்தும் வசதியும், காணொளி களை பார்க்கும் வசதியும் அதிகரிக்கப்பட்டன. |

*(The First Blue Ocean Strategy Was to offer movies in Online. With Time Companies Like Amazon ,Hulu ,HBO came with same offer)*

சரி படத்தை பத்தி பார்த்தாச்சு அடுத்து பாட்டை கேட்டிட்டு இதுக்கு *End Card*உ போடுவோம். இன்னைக்கு தமிழ் ராக்கர்ஸ் மாறி அன்னைக்கு *Music Industry*ல *Piracy Issues* தலைவிரிச்சு ஆடின காலம் அது. அந்தகாலத்துல பாட்டு கேக்கனும்னா *Legal*ஆ *CD* தான் வேண்டனும். ஆனா தொழில்நுட்பமும் இணையமும் போட்டிப் போட்டுக்கொண்டு வளர சனத்துக்கு இப்படி மொத்த ஆல்பத்தையும் *CD*ஆ கொள்வனவு செய்றதில உடன்பாடு இருக்கல்ல.சில சமயம் நல்லா இருக்கிற ஒரு பாட்டுக்காக மொத்த ஆல்பத்தையும் வேண்டுறது வீண் செலவாப்பட்டிச்சு. இதனால *Illeagal*ஆ பாட்டு தரவிறக்கம் செய்ய ஆரம்பிச்சாங்க.அதோட எதும் *Portable Device*ல கேட்டு *Online*ல டவுன்லோட் பண்ண வாய்ப்பு இருந்தா நல்லா இருக்கும்னு சிந்திக்க ஆரப்பிச்சிட்டாங்க.




அப்பதான் *Apple Company* லாவகமா ஒரு அடியெடுத்து வைக்கிறாங்க.அதாவது சந்தைல *Ipod*அ பாட்டுக் கேக்க *Introduce* பண்றாங்க.ஆனா அந்த *Move* வெற்றி பெற முதுகெலும்பாக இருந்தது அதுகூட அவங்க *Itunes*அயும் *Introduce* பண்ணி விட்டதுதான்.அதாவது தனித்தனி பாடல்களா இணையத்தில கொள்வனவு செய்ய உருவாக்கப்பட்ட வலைப்பக்கம் தான் *iTunes*. இந்த நீலசமுத்திர *Stratergy*ல பெரிய பெரிய *Music Companies*கு உடன்பாடே இல்லை அவங்க அவங்களொட சிவப்பு

| | |
|---|---|
| Cds, முழு ஆல்பம் வாங்கும் தேவை, சட்டச்சிக்கல்கள் என்பன நீக்கப்பட்டன. | கொள்வனவு செலவு குறைக்கப்பட்டது. |
| சட்டரீதியாக இணையவழியில் அணுகும் வசதி உருவாக்கப்பட்டது. | இலகுவாக அணுகும் முறை அதிகரிக்கப்பட்டது. |

iTunes

சமுத்திரத்திலயே மீன் பிடிச்சுக்கிட்டு இருந்தாங்க.ஆனா மீன்வாங்கிற மொத்த பேரையும் *iTunes* தன் பக்கம் இழுக்க போறானு அவங்க யாருக்கும் அப்ப தெரியல.சட்ட ரீதியா தரமா ரெடி பண்ணி மீன்களை சந்தைக்கு *iTunes* கொண்டு வர அவனோட கடைல அலைகடலென மக்கள் கூட்டம் திரண்டது. அவனது கல்லாப் பெட்டியும் கஜானா வா மாறிச்சு. ஆனா என்ன காலம்போக போக *Spotify/Dezer* மாறி இதே சேவையை வழங்க ஆரம்பிச்சு தங்களோட சந்தைக்குல நுழைய காசு தேவை இல்லை என்டு சொன்னதும் நீலசமுத்திரம் மறுபடியும் சிவப்பா மாறிச்சு. இதுக்கு இன்னொரு *Blue Ocean Strategy*ய கொண்டு வந்திருந்தா *Apple* தனிக்காட்டு ராஜாவா இருந்திருக்கலாம் ஆனா அது கைகூடல.

இப்படி *Blue Ocean Strategy*கு உதாரணங்களா அடுக்கிட்டே போலாம் இந்தியால ரெடியோக்கள பணக்காரர்கள் மட்டும் வாங்கிய காலத்தில் *Middle Class* மக்களை குறிவைச்சு தவணை முறையில ரேடியோ விற்பனை செய்ய ஆரம்பிச்ச அந்த *Blue Ocean Strategy*தான் இன்னைக்கு வசந்த் & Co வெற்றிகரமா வலம் வரக்காரணம்.

*So* தளபதி ஸ்டைல்ல கடைசியா சொன்னா *Moral of the Story is* ஒண்ணு வாய்ப்பு இருக்கிற அவங்க இடத்தில நாம சண்டை செய்ய கத்துக்கனும் இல்லாட்டி வாய்ப்பை நாமளே உருவாக்கிக்கிட்டு நம்ம இடத்தில அவங்கள சண்டைக்கு கூப்பிடனும்.



**கல்வியும், செல்வமும், வீரமும் வேண்டி பெண் சக்திகளை வழிபடும் நவராத்திரி விரதம் இனிதே வரும் 17ம் திகதி ஆரம்பமாகிறது.**

**அம்பிகையை சரண் புகுந்தால் அதிக வரம் பெற்றிடலாம்...**




மகாபாரதம் முழுவதும் நான் நிறைந்து காணப்படுகிறேன்.


நான் யார் என்று தெரிகிறதா?



என்னால் நிறைந்தது தான் மகாபாரதம். சந்தனு மகாராஜா முதல் அபிமன்யு வரை அனைவருமே தியாகம் செய்தார்கள். அந்த தியாகத்தின் சம்பளமாய் எதை பெற்றார்கள்? பிரதிபலன் எதிர்பார்த்தது தியாகம் என்று சிலர் கேட்பது கேட்கிறது. முதலில் தியாகம் உதவிக்குள் அடங்காதென்பதை ஏற்றவர்கள் மாத்திரம் தொடர்ந்து வாசியுங்கள். உதவியிலும் நான் பெரியவனா சிறியவனா என்கிற வாதத்திற்குள் நான் வர விரும்பவில்லை. அது எனக்கு தேவையுமில்லை.

போட்டி போட்டுக்கொண்டு சண்டை செய்த மகாபாரதத்தைத்தான் பலர் தெரிந்து வைத்திருப்பீர்கள். ஆனால் உண்மையில் போட்டி போட்டு அங்கே அனைவருமே தியாகம் தான் செய்திருக்கிறார்கள் என்ற கதை தெரியுமா உங்களுக்கு? குரோதம் நிறைந்த குருதி நுரைகளுக்குள் மறைக்கப்பட்ட தியாக கப்பச்சினோவை ஒவ்வொன்றாக பருகத் தயாராகுங்கள்.

அரச வம்சத்தவர்கள் எல்லோரும் குறைந்தது ஒரு தாரமாவது வைத்திருக்காமல் இருந்ததில்லை எனும் சூழலில், அவர்களை கேள்வி கேட்க யாருமில்லை எனும் சந்தர்ப்பத்தில் அங்கே ஒருவன் பிரமச்சரியத்தை விரும்பி ஏற்றானே.. அது மட்டுமா பதவி ஆசையில் உடன்பிறந்தவர்களே அடிபட்டுக்கொண்ட மகாபாரதத்தில் அரசனாக சகல உரிமைகளும் இருந்தும் தானாக அரசனாவதை தியாகம் செய்தானே!! அவனைப்பற்றித்தான் முதலாவதாக சொல்லப்போகிறேன். யார் என்று தெரிகிறதா? ஆம், கங்கை மைந்தன் பீஷ்மனைத்தான் சொல்கிறேன். அரசை துறந்தவர்கள் துறவறம் போவதே வழமை. எனக்கு உரிய சிம்மாசனத்தில் இன்னொருவரை இருக்க வைத்து, அவருக்கு காவலனாய் இருப்பதென்பது எவருக்கும் இயலாத காரியம். ஆனால் பீஷ்மன் தலைமுறைகள் கடந்தும் உயிருள்ளவரை காவலனாய் அஸ்தினாபுர அரசை காத்தான். அதுமட்டுமா, அம்பைக்கு அளித்த வாக்கின் படி விருப்ப மரணத்தை வரமாய் பெற்றிருந்தும் சிகண்டியாய் வந்த அம்பையிடம் தன் உயிரை தியாகம் செய்தான். திருதராட்டினனும் சரி, துரியோதனனும் சரி செய்த வன் செயல்களை தண்டிக்க துணிந்த போதெல்லாம் தியாகத்தால் அவன் வழங்கிய வாக்குகள்



அவனை கட்டுப்படுத்தின. அநீதிக்கு துணை நின்றதோடு மட்டுமல்லாமல் எல்லோரது அழிவுக்கும் ஒரு வகையில் காரணமானதும் பீஷ்மனின் தியாகம். பதவி வேண்டாம், மனைவி வேண்டாம் என்று அரசின் அடிமையாக ஆயுள் வரை இருப்பதாய் ஒரு தியாகம் செய்திருக்கத்தான் வேண்டுமா?



பிறப்பால் சத்திரியனாக இருந்தும் வளர்ப்பால் சத்திரியன் இல்லையென்பதற்காக வஞ்சிக்கப்பட்டிருந்தும் தானம் என்கிற பெயரில் அவன் செய்த தியாகங்கள் அவன் உயிரையும் பறித்தன. ஆம், சூரிய புத்திரன் கர்ணனைத்தான் சொல்கிறேன். கதிரவன் அளித்த கவச குண்டலங்கள் கர்ணன் உடலோடு உள்ளவரை அவனை எவராலும் மாய்க்க முடியாதென்பதை உணர்ந்திருந்தும் மாறு வேடத்தில் வந்த இந்திரன் கேட்ட போது இன்முகத்தோடு அளித்தான். அதே போல் பெற்றெடுத்து ஆற்றோடு விட்ட அன்னை நாகாஸ்திரத்திரத்தை அர்ச்சுனன் மீது ஒரு முறைக்கு மேல் பாவிக்க வேண்டாமென கேட்ட போது அதற்கும் அதே இன்முகத்தோடு சம்மதித்தான். அது மட்டுமா பலத்த சூழ்ச்சியால் தேரடியில் உயிர்போகும் சமயத்தில் அவன் செய்த புண்ணியங்கள் அவன் உயிர் காத்து நின்றன. புண்ணியங்களுக்காகத்தான் ஒருவன் தானம் செய்கிறான், தியாகம் செய்கிறான் என்று நினைத்தால் கர்ணனோ அந்த புண்ணியங்களையே இறுதியாக யாசகமாய் கேட்ட கண்ணனிடம் தியாகம் செய்தான். தான் வாழும் காலம் வரை தன்னை புறக்கணித்த இந்த உலகத்திற்கு தியாகங்களால் இன்பமளித்தவன் அதனால் அவமானங்களையும் தோல்விகளையும் ஈற்றில் மரணத்தையுமே பெற்றான் என்றால் அப்படியான தியாகங்களை கர்ணன் செய்திருக்கத்தான் வேண்டுமா?

ஒரு தேசத்தின் இளவரசி, விழி வழி தெரியாதவனை விருப்பமின்றியே மணம் முடித்தவள், தன் விழிகளை கணவனுக்காய் தியாகம் செய்து, தன் மகனுக்காய் அந்த தியாகத்தையே தியாகம் செய்தவள்! அவள் தான் சகுனியின் சகோதரி காந்தாரி! கட்டியவன் பிடிக்காதவனாய் இருந்ததாலும், அவன் குறையை ஏளனம் செய்வதற்காகவுமே காந்தாரி தன் கண்களை கட்டியதாக அனைவரும் மட்டுமல்ல அவள் துணைவரும் நினைத்திருந்தனர். ஆனால் அவள் அப்படியா நினைத்திருந்தாள். விழியற்றவருக்கு வழியாக இருக்க ஒரு பணிப்பெண் போதுமே. தாரமாய் தான் எதற்கு? அவரது உணர்வுகளை உணர்ந்து கொள்ள, அவரது உள்ளத்தில் உறைந்துள்ள தாழ்வு மனப்பான்மையை இல்லாது செய்ய தன் விழிகளை விரும்பியே மறைத்துக் கொண்டாள். விழி மடல்களுக்கே அலங்காரம் செய்யும் பெண்களுக்கு மத்தியில் காதலால் காந்தாரி செய்த தியாகத்திற்கு எல்லையே இல்லை. பல வருடங்களாக காத்த அந்த விரதத்தை தன் மகனின் வெற்றிக்காக தியாகம் செய்யவும் மனமமைத்தாள். தாலிக்கொடி உறவுக்காகவும் தொப்பிள் கொடி உறவுக்காகவும் அவள் செய்த தியாகம் அனைவராலும் புரிந்து கொள்ப்படாததாக, சகுனியின் வன்மம் வளர்க்க காரணமானதாக இருந்ததோடு அவளுக்கும் துன்பத்தையே தந்ததெனும் போது காந்தாரி இந்த தியாகங்களை செய்திருக்கத்தான் வேண்டுமா?



தன்னை அவர் சீடனாக ஏற்காவிட்டால் என்ன? அவரைத் தான் என்றென்றும் குருவாக மானசீகமாக ஏற்று, அவருக்காக தன் இலட்சியமாக கருதி கற்ற வித்தையையே தியாகம் செய்தானே ஒருவன். ஏகலைவன்! வில் வித்தை அவன் கனா. அதற்கான குருவை நாடிச்சென்ற போது அவமானப்படுத்தப்பட்டான். தானாக வித்தைகள் பயின்றான். குரு துரோணாச்சாரியரே தனக்கு அவற்றை கற்பிப்பதாய் நினைத்தான். துரோணரின் நேரடி சீடனான அர்ச்சுனனையே விஞ்சும் வில்லாளனாய் ஏகலைவன் உருவாகிக்கொண்டு இருப்பதை அறிந்த துரோணர் கற்பிக்காத வித்தைக்கு குரு தட்சணை கேட்டார். தானாக கற்றாலும், அவரால்த்தான் கற்றதாக எண்ணி இருந்த ஏகலைவன் குரு தட்சணையாக அவர் கேட்ட கட்டை விரலை கொடுத்தான். அன்றிலிருந்து நாணேற்றி வில் தொடுக்கவில்லை. மீண்டும் உலகின் தலைசிறந்த வில்லாளி அர்ச்சுனன் ஆனான். ஏகலைவனின் கனவுகளையும் முயற்சிகளையும் பொசுக்கிய இந்த தியாகத்தை அவன் செய்திருக்கத்தான் வேண்டுமா?



அண்ணனுக்காக அரசை தியாகம் செய்த பாண்டு, மாமியாரின் வார்த்தைக்காக தன் வாழ்க்கையையே ஐவரோடு பகிர்ந்த பாஞ்சாலி, சென்றால் மீள வரும் வழி தெரியாதென்பது தெரிந்தும் பெரியப்பாக்களுக்காக சக்கர வியூகத்திற்குள் சென்று உயிரை விட்ட அபிமன்யு, அதர்மம் என்று தெரிந்தும் புத்திர பாசத்தால் போருக்கு சென்று உயிர் துறந்த துரோணர், உறவுகளுக்காக உயிர் தியாகம் செய்த அர்ச்சுனனின் மகன் அரவான் என மகாபாரதம் முழுவதும் நான் நிரம்பித்தான் காணப்படுகின்றேன்.



மனித குலத்தின் மீட்சிக்கும் புரட்சிக்கும் பல தியாகங்கள் வித்திட்டுள்ளன. அவற்றையும் சேர்த்து நான் அவமானப்படுத்துவதாய் எண்ண வேண்டாம். என் கோபம் எல்லாம் தியாகம் எனும் பெயரில் முட்டாள்தனம் செய்பவர்களில்த்தான்.

மகாபாரதத்திலும் சரி, நிஜ வாழ்விலும் சரி பெரும்பாலும் ஒருவர் செய்கின்ற தியாகம் அவருக்கும் சந்தோசத்தை தருவதில்லை. அவர் சார்ந்தோருக்கும் சந்தோசத்தை தருவதில்லை.
எனின் இப்படியான தியாகங்களின் தார்ப்பரியம் தான் என்ன? இவை தர்மத்திற்குள் அடங்குமா? சிந்தித்துப் பாருங்கள்...

தியாகமே தியாகம் செய்ய வேண்டாமென்று சொல்லித் தியாகம் செய்கிறதென நீங்கள் கேட்பது கேட்கிறது. தியாகம் செய்யாதீர்கள் என்று ஒரு போதும் சொல்லவில்லை. எரியும் ஓலைக்குடிலின் தியாகத்திற்கும் ஒளிரும் மெழுகுவர்த்தியின் தியாகத்திற்கும் வித்தியாசம் உணர்ந்த பின்னர் தியாகம் செய்யுங்கள் என்று தான் சொல்கிறேன்.

**இப்படிக்கு,**
**தியாகம்**

# வழுக்கியாறு

## சூழற்தொகுதியின் அமைப்பும் தொழிற்பாடும்

T.K.மதி

**3. சமூக குழுக்களும் நிறுவனங்களும் (Social groups and Organizations)**

விவசாய சமேளனம், மாதர் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், கூட்டுறவுவர்த்தக நிலையங்கள், விளையாட்டுக்கழகங்கள், சமூர்த்திக் குழுக்கள், இளைஞர் கழகங்கள், கிராமஅபிவிருத்திச்சங்கங்கள், சுற்றுச்சூழல் சுகாதாரக்குழுக்கள் என்பன முக்கியமான சமூகம்சார் குழுக்களாகவும் சட்டரீதியாக பிரதேச செயலகத்தால் பதிவு செய்யப்பட்டும் காணப்படுகின்றன. இவற்றை விட சட்ட ரீதியாக பதிவுசெய்யப்படாத விவசாயிகள் குழுக்கள், விவசாய கூலியாளர்கள் குழுக்கள் மற்றும் கோயில் தொண்டர் சபைகள், பரிபாலன சபைகள் மற்றும் கிராமிய இளைஞர் குழுக்கள் என்பனவற்றை இவ் வழுக்கியாறு வடிநிலப்பகுதியில் பரவலாக அவதானிக்க முடிகின்றது. அயலவர்கள் ஒன்றாக இணைந்து அவரவரது வீடுகளில் நடைபெறும் மங்கல, அமங்கல நிகழ்ச்சிகளின் போது பங்குபற்றுவதுடன் அவர்கள் சமூகரீதியிலான அமைப்பியலில் கிட்டத்தட்ட ஒத்த ஒற்றுமையை (Homogenous) காட்டுகின்றார்கள்.




**4. சமூக இடைத்தொடர்பு (Social network)**

பல்வேறான சாதிய மக்கள் குடித்தொகை பிரதேசத்தில் காணப்படுவதுடன் தொழிற்பிரிப்பானது பெரும்பாலும் சாதிய அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. ஒவ்வெரு சாதியை சேர்ந்தவர்களும் மற்றய சாதியை சேர்ந்தவர்களுடன் தொழில் ரீதியாக வலிமையாக சார்ந்து காணப்படுகின்றார்கள். இவ் வேலைப்பகுப்பினால் உற்பத்தித்திறன் மற்றும் சேவைகள் வினைத்திறனுடன் நடைபெறுவதுடன் பிரதேசமானது தன்னிறைவு கொண்டதாக காணப்படுகின்றது.

தச்சு வேலை, இரும்பு வேலை, தங்க நகை வேலை, பதனீர் கள் சேகரித்தல், ஆடைச்சலவை, விவசாய வேலைகள், கோயில் சம்மந்தப்பட்ட வேலைகள், இசை வாத்தியங்கள் இசைத்தல், முடி வெட்டுதல் மற்றும் சுத்திகரிப்பு போன்றவை சிறத்தலடைந்த தொழிற்பகுப்பிற்கு சில உதாரணங்கள் ஆகும். ஒவ்வெரு தொழிலாளர்களும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களும் மற்றய தொழிலாளர்கள் மீது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நெருக்கமாக சார்ந்து காணப்படுகின்றனர்.

அரச மற்றும் தனியார் நிறுவனங்களும் கிராம மக்களின் இயக்கத்தில் முக்கிய பங்கு வகிப்பதன் மூலம் நெருங்கிய தொடர்பை காட்டுகின்றன. பாடசாலைகள், வைத்தியசாலைகள், தபால்நிலையம் என்பன அரச நிறுவனங்களுக்கு சில உதாரணங்களாகவும் தனியார் வர்த்தக நிலையங்கள், தனியார்

கல்விநிலையங்கள் மற்றும் மருத்துவ நிலையங்களை தனியார் நிறுவனங்களுக்கு உதாரணங்களாகவும் கொள்ள முடியும். இந்நிறுவனங்கள் மூலமாக வாழ்வாதாரத்தின் பொருட்டான வேலை வாய்ப்பினை கிராம மக்கள் பெற்றுக்கொள்வதுடன் பல்வேறு சேவைகளை இந்நிறுவனங்கள் கிராமமக்களுக்கு வழங்குகின்றன.



### சூழற்தொகுதியின் ஆக்க அலகுகள் (Ecological components)

வழுக்கியாறு சூழற்தொகுதியானது உயிர்ப்பொருட்கள் (Biotic things) எனப்படும் உயிருள்ள அங்கிகளையும் உயிரற்ற பொருட்கள் (Abiotic things) எனப்படும் உயிரற்ற சடப்பொருட்களையும் கொண்டு காணப்படுகின்றன.

### 1. உயிர்ப்பொருட்கள் (Biotic things)

தாவரங்கள், விலங்குகள், நுண்ணுயிர்கள் என்பன பிரதானமான உயிருள்ள உயிர்வாழ் அங்கிகளாகும். இயற்கை விலங்குகள் மற்றும் பறவைகள் மிக அதிகமாக இப்பிரதேசத்தில் காணப்படுவதுடன் மீன்கள் குளங்களிலும் விவசாய கிணறுகளிலும் காணப்படுகின்றன. இப்பிரதேசமானது விவசாய நிலங்களை அதிகளவில் கொண்டு காணப்படுவதால் விவசாய பீடைகள், சிறிய பூச்சிகள் மற்றும் நுண்ணங்கிகள் என்பன மிக அதிகமான பல்வகைமையை காட்டுகின்றன.

வீட்டு செல்லப்பிராணிகளாக வளர்க்கப்படும் நாய், பூனை, அலங்கார மீன்கள் மற்றும் புறா, லவ்பேட்ஸ் போன்ற பறவைகளும் வீட்டுத்தேவைக்காகவும் வாழ்வாதாரத்தின் பொருட்டும் வளர்க்கப்படும் கால்நடைகளான மாடு மற்றும் ஆடுகளும் பறவைகளான கோழி, தாரா என்பனவும் இவ் உயிர்ப்பொருட்களில் அடங்குகின்றன.

### 2. உயிரற்ற பொருட்கள் (Abiotic things)

இயற்கை மூலதனங்கள் (Natural capital) மற்றும் அமைக்கப்பட்ட மூலதனங்கள் (Built capital) என்பன உயிரற்ற பொருட்களில் முக்கிய இரு பிரிவுகளாகும்.



காலநிலை, மண்வளம், நிலத்தடி நீர், உயர் நிலங்கள் மற்றும் தாழ் நிலங்கள் என்பன இயற்கை மூலதனத்தில் உள்வாங்கப்படுவதுடன் குளங்கள், பிரதான மற்றும் துணையான வடிகால்கள் வீதிகள், கட்டடங்கள், வீடுகள், வணக்கஸ்தலங்கள், கிணறுகள் என்பன மனிதனால் அமைக்கப்பட்ட மூலதனங்களாகவும் கொள்ளப்படுகின்றன.

(ஆறு ஓடம்)

## மருத்துவம் போற்றுதும்

சுகமாரன் சுஜன்.
4ம் வருடம்,
கொழும்பு மருத்துவ பீடம்.

(கடந்த இதழின் தொடர்ச்சி...)

எபிலெப்சியில் பல வகை உண்டு. மூளையில் எந்தப்பகுதியில் இந்த மின்சாத குளப்பங்கள் ஏற்பட்டு, அது எவ்வாறு பரவிச்செல்கிறது என்பதை பொறுத்து அந்த அறிகுறிகளும் மாறும்.
உதாரணமாக,!!!




* அப்செென்ஸ் வலிப்பு.சிறு வயதிலே ஏற்படும். இந்த நோயுள்ள ஒரு பிள்ளை பகற்கனவு காண்பவன் போல அல்லது ஒரு சில செக்கன்டுகளுக்கு "கவனச் சிதறல்" (ஸ்பேசிங் அவுட்) தோற்றமளிக்கலாம். என்வே பொதுவாக இந்தப்பிள்ளைகளிற்கு இந்த வலிப்பு ஏற்படும் போது சில செக்கன்களுக்கு அவர்கள் உறைந்தது போல தெரிவர். எனவே ஆசிரியர்களால் "பகல் கனவு " காண்பவர்கள் என்று முறைப்பாடு செய்யப்படுவார்கள். ஆனால் இது ஒரு எபிலெப்சி ஆகும். இங்கே கை கால்கள் அடித்து உதறப்படுவது இல்லை.

* எளிமையான பகுதியான *(simple focal seizures)* வலிப்புநோயுள்ள ஒரு பிள்ளை இல்லாத ஒரு சத்தத்தைக் கேட்கலாம், அல்லது ஒரு கையில் திடீர்த் தசை இழுப்பு ஏற்படலாம்.

* டோனிக்-க்ளோனிக் *( generalized tonic-clonic seizure)* வலிப்பு நோயுள்ள ஒரு பிள்ளை தரையில் வீழ்ந்து கை கால்கள் இழுத்து, உதறி , கண்கள் மேலே செல்ல, வாயால் நுரை தள்ள , நாக்கி பற்களால் கடிக்கப்படுவதால் வாயால் இரத்தம் வர வர, சத்தமான குரல் எழுப்புவார்கள். எனவே அருகில் இருப்பவர்களுக்கு இது ஓர் அச்ச உணர்வை கொடுக்கும். சமூகத்தால் இந்த அறிகுறியே பொதுவாக வலிப்பு என கருதப்படுகிறது.

* *Myoclonic jerking.* அதாவது திடீரென உடலில் ஒரு அவையம், அல்லது பல அவையங்களில் ஒரு வேகமான அசைவு ஏற்படும்*(rythemic shaking)*. ஆனால் பொதுவாக சாதாரணமாக நம் அனைவருக்கும் நித்திரையில் வீழும் சந்தர்ப்பத்திலே சில சமயங்களில் திடீரென ஓர் அசைவு ஏற்படலாம். அது சாதாரணமானதே.

இது போன்று பல வகையான எபிலெப்சி வகை உண்டு.

எபிலெப்சி ஏற்பட முதல் , சிலருக்கு ஒரு வகையான உணர்வு ஏற்படும். இதை *aura* என்று சொல்வர். கை கால்களில் சோர்வு, வலி, சிலருக்கு பயம் போன்ற உணர்வுகள் கூட ஏற்படலாம்.
எபிலெப்சி வலிப்புக்கள் பொதுவாக அதிக நேரம் நீடிப்பது இல்லை. 2,3 நிமிடங்களில் தாமாகவே சரி ஆகி விடும். வலிப்பு ஏற்படும் தருணங்களில் சுய நினைவு இழக்க நேரிடும். ஆனால் இது என்னவகையான எபிலெப்சி என்பதை பொறுத்தே இருக்கிறது.
வலிப்பு முடிந்த பின்னர் நோயாளிக்கு களைப்பு தன்மையோடு, பேச முடியாதவராய் , பூரணமாக சுய நினைவு திரும்பாதவராய் , நித்திரையோடு காணப்படுவார்கள். பொதுவாக இது நிமிடங்கள் தொடங்கி மணித்தியாலயங்கள் வரை நீடிக்கும். பெரும்பாலும் வலிப்பு வந்தவர்கள் வைத்தியசாலை வரும் நேரத்தில் வலிப்புடன் வருவது இல்லை. ஏன் எனில் அவை குறுகிய நேரமே நீடிக்கும். ஆனால் குழம்பிய மன நிலையில் என்ன நடந்தது என்பதில் உறுதி அற்றவர்களாக சில நிமிடங்கள் காணப்படுவர்.

சரி . இப்போது இந்த வலிப்பு நோயால் எப்படியான ஆபத்துக்கள் ஏற்படுகின்றன என்ற கேள்விக்கு வருவோம். பொதுவாக குறுகிய நேரத்தில் ஏற்லடும் வலிப்பால் மரணம் ஏற்படப்போவது இல்லை. ஆனால் சில வலிப்புக்கள் 5 நிமிடத்திற்கு மேலதிகமாக இருக்கும். இதை *statsu*

*epilepticus* என்று சொல்வர். இவை ஆபத்தானவை. உடனடியாக மருந்துகள் மூலம் கட்டுப்படுத்தப்பட வேண்டியவை. இது ஒரு அவசர நிலை ஆகும் (*medical emergency*). ஏன் எனில் நீண்ட நேர வலிப்புக்கள் மூளையில் நிரந்தரமாகவே பாதிப்பை ஏற்படுத்தி விடும்.

அப்படி என்றால் வலிப்பு எவ்வாறு உயிரை கொல்லும்? உதாரணமாக நீரிலே நீச்சல் அடிக்கும் போது, உயரமான உடங்களில் வேலை பார்க்கும் போது, வாகனங்களை ஓட்டும் போது வலிப்புக்கள் வந்தால் என்ன நடக்கும் என சிந்தியுங்கள். எவ்வாறே உயிர் பிரிய வாய்ப்பு இருக்கிறது. எனவே தான் வலிப்பு உடையவர்கள் தயவுசெய்து இந்த நீரிலே நீந்துவதை தவிர்த்து கொள்ளுங்கள். இதை விட உணவு உண்ணும் வேளையில் வலிப்பு ஏற்பட்டால் , உணவு சுவாசக்குழாய்களில் சிக்கி , சுவாசம் இன்றி பல மரணங்கள் ஏற்படுகிறது.

எனவே ஒருவருக்கு வலிப்பு ஏற்பட்டவுடன் என்ன செய்ய வேண்டும்?? முதலிலே வலிப்பு ஏற்பட்டவுடன் ஒருவரின் தோற்றத்தை கண்டு அஞ்சாதீர்கள். அந்த இடத்தில் நீங்கள் தான் அவரின் உரிரைக்காப்பாற்றபோகிறவர்கள் என்பதையும், சாதாரணமாக வலிப்புக்கள் சில 1,2,3 நிமிடங்களில் தானாக சரியாகிவிடும் என்பதையும் மனதிலே நிறுத்துங்கள். எனவே நீங்களாக ஏதும் செய்து வலிப்பை நிறுத்த தேவை இல்லை. ஆனால் நீங்கள் செய்ய வேண்டியது சிலது இருக்கிறது. அதாவது நோயாளியின் தலையிலே காயங்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. அதை கவனித்து தவிர்க்க உதவுங்கள். கை கால்களை அடிக்கும் போது அதை இழுத்துப்பிடித்து கட்டுப்படுத்த வேண்டாம். அவை வீண் முறிவுகளை கொண்டு வரும். நோயாளியை இடது புறம் சரித்துப்பிடியுங்கள். எனவே நுரையீரலிற்குள் ஏதும் உணவுக்கூறுகள் செல்வதை தடுக்கலாம். வலிப்பு ஏற்படும் வேளையில் தண்ணீர் கொடுப்பது, வாயால் மருந்து கொடுப்பதை தவிருங்கள். நோயாளி கட்டுப்பாடு இன்றி உள்ளார். எனவே அவை நுரையீரலிற்குள் சென்று மரணத்தை கூட ஏற்படுத்தலாம். நோயாளி கணணாடி அணிந்து இருப்பின் அதை நீக்கி விடுங்கள். கண்ணிலே காயம் ஏற்படுவதை தவிர்க்கலாம். எனவே அருகே இருந்து இவற்றை செய்தாலே போதும். வலிப்பு முடிந்தவுடன் வைத்திய உதவியை நாடுங்கள்.

எபிலெப்சி நோயை கட்டுப்பாட்டில் வைத்திருக்க மருந்துகள் உண்டு. எனவே அவற்றை எடுப்பவர்கள் தொடர்ச்சியாக பரிந்துரைத்த அளவிலே எடுக்க வேண்டும். முக்கியமாக , மருந்துகளை திடீரென நிறுத்துவது வலிப்பை ஏற்படுத்தும். வாழ்க்கை முழுவதும் மருந்து மூலமே வாழ வேண்டும் என்பது அல்ல. தொடர்ச்சியாக 2 வருடங்களுக்கு மேல் வலிப்பு இல்லாவிடில் , வைத்திய பரிசோதனைகள் உறுதிப்படுத்தப்பட்டு, படிப்படியாக மருந்து நிறுத்தப்படும். இது வைத்தியர்களாலே முடிவு எடுக்கப்படும். இதைவிட எபிலெப்சி வாழ்க்கை முழுவதுமே ஏற்படும் என்றும் அல்ல சில வகையானவை இடையிலே பூரணமாக நீங்கிவிடும். மற்றும் பெரும்பாலானவை மருந்துகள் மூலம் மீண்டும் ஏற்படாமல் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளக்கூடியவை.



எனவே எபிலெப்ப்சி என்பது கொடுமையான ஓர் நோய் என்ற எண்ணத்தையும், அந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் வித்தியாசமானவர்கள் என்ற சமூக கருத்தும் இந்தப்பதிவின் மூலம் நீங்கிவிட்டாலே மகிழ்ச்சி...


# யார் இவர்கள்?

மனிதனால் பெயர் சுட்டப் பெறாத, பெயர் சுட்ட முடியாத விஷயங்களே ஏலியன் (ALIEN) என்று அழைக்கப்படுகிறது. சிறு வயது முதலே எம்மை ஆச்சரியமூட்டும் ஒரு அமானுஷ்யமே இது. பறக்கும் தட்டில் பயணிக்கும் அதிசய மனிதர்கள் அவர்கள். நாகரிகங்கள் பல வளர்ந்த இன்றைய காலகட்டத்தில் கூட 'ஏலியன்ஸ்' என அழைக்கப்படும் வேற்றுக் கிரக வாசிகள் பூமிக்கு வந்தமை குறித்து பல்வேறு தளங்களில் விவாதிக்கப்படுகின்றது. இவ்வாறான சூழலில் வேற்றுக்கிரகவாசிகள் தொடர்பான கேள்விகள் எம்மில் பலருக்கு எழுகிறது.

வேற்றுக்கிரகவாசிகள் இப்பூமியில் இருந்ததற்கான ஆதாரங்கள் தற்போது கிடைத்துள்ளன. எம் முன்னோர்கள் வாழ்ந்த காலப்பகுதியில் அவ்வாறானவர்களால் வரையப்பட்டதாகக் கருதப்படும் ஓவியங்கள் இதற்குச் சான்றாதாரமாக விளங்குகின்றது. இதனைத் தவிர கல்வெட்டுக்களிலும், கற்சிற்பங்களிலும் ஊடாக வேற்றுக்கிரகவாசிகள் இருந்தனர் என்பதற்கு எழுத்து மூல ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. ஆயிரம் வருடங்கள் பழைமைமிக்க அந்தக் குகை ஓவியங்களில் யாரைப் பார்த்து எம்முன்னோர்கள் வரைந்தார்கள் என்கின்ற கேள்விக்கு இன்றைய விஞ்ஞானிகள் பதில் கூறவேண்டிய கடப்பாட்டிலுள்ளனர். அவ்வாறே அவர்களின்



காட்சியமைப்பும் அதனைச் சித்தரிக்கும் விதம்விதமான ஓவியங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.



இவ்வாறான ஓவியங்கள் பல, இதற்கு எடுத்துக்காட்டாக அமெரிக்காவிலுள்ள 'சீகோ கேன்யன் உட்டா' குகையிலும் அவுஸ்திரேலியாவிலுள்ள 'கிம்பெர்லி' குகையிலும் இன்றும் காணப்படுகின்றன. துருக்கியின் இஸ்தான்புல் அருங்காட்சியகத்தில் விண்கலத்தில் ஓர் உருவம் அமர்ந்திருப்பது போன்ற சிற்பம் ஒன்று காணப்படுகின்றது. இத்தாலிய குகை ஒன்றிலும் தலையில் ஹெல்மெட் அணிந்த உருவங்கள் கொண்ட ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாறாக பல்வேறுபட்ட குகைகளில் வேற்றுக்கிரகவாசிகள் தொடர்பான சிற்பங்களும் ஓவியங்களும் கிடைத்துள்ளன. இதனாலேயே, நம் முன்னோர்கள் வேற்றுக்கிரக வாசிகளை பார்த்தே அவர்கள் ஓவியங்களையும் சிற்பங்களையும் உருவாக்கியுள்ளனர் என்பதை சில ஆய்வாளர்கள் ஆதாரபூர்வமாக ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அதுமட்டுமன்றி, இன்றைய நவீன காலத்தில் வேற்றுக்கிரகவாசிகள் பறக்கும் தட்டுக்களில் பூமியை வந்தடைகின்றனர் என்ற தகவல்களும் அண்மைக்காலத்தில் பேசுபொருளாகின. இவற்றை வெறும் வதந்திகள் எனக்கூறி ஒதுக்கிவிட முடியாது. நம் கண்ணால் காண்பவை மட்டும்தான் உண்மை என்ற மாயையை கொண்டு அதனை நிராகரித்து விடவும் முடியாது. இதுவரையில் விஞ்ஞானிகளின் கண்களுக்குத் தெரியாமல்



இருந்து வந்த வேற்றுக்கிரக வாசிகளின் வாழ்விடங்களை தன்னார்வ வானியியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இவ் ஆய்வின்படி வேற்றுக்கிரக வாசிகள் பூமிக்கு அடிக்கடி வருகின்றனர் என்பது கூட உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், இலங்கைக்கும் வேற்றுக்கிரகவாசிகள் பறக்கும் தட்டுகளில் வந்துள்ளதாக கூறப்படுகிறது. இதன்படி, 2002 ஆம் ஆண்டளவில் இலங்கையின் மலைப் பிரதேசங்களில் ஒன்றான திம்புலாகலக் குன்றின் உச்சியில் வழமைக்கு மாறான நீலநிற ஒளியை பிரதேசவாதிகள் அவதானித்தள்ளனர். இதனைப்போல கண்டி - மாத்தறை எல்லைப் பகுதியில் அமைந்துள்ள 'லகேகல' எனும் மலைக்குன்றின் மேல் குறிப்பிட்ட சில தினங்களில் வழமைக்கு மாறான பிரகாசமான ஒளிகள் தோன்றியுள்ளன எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி இந்த மலைக்குன்றின் மேல் பறக்கும் தட்டுக்களை ஒத்த வானில் நகரும் பொருட்களையும் சிலர் அவதானித்துள்ளனர்.

பின் இந்த மலையை ஆய்வு செய்த ஆய்வாளர்களில் ஒருவரான எமரெண்டே ஒபேசேகர என்ற விஞ்ஞானி, இந்த மலையில் வேற்றுக்கிரகத்துடன் தொடர்பு கொள்ளும்



வகையில் சில அமைவிடங்கள் இனங்காணப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார். இலங்கையில் வேற்றுக்கிரகவாசிகள் தொடர்பில் அதிகம் பேசப்படும் இடமாக தானிகல மலை காணப்படுகின்றது. இந்த மலைப்பகுதி - ஏலியன் மலை என்று கிராமவாசிகளால் அழைக்கப்படுகின்றது.

இவ்விதமாக வேற்றுக்கிரகவாசிகள் தொடர்பாக பல்வேறு ஆய்வுகளும் மர்மங்களும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. உண்மைகளை நாடும் தேடல்களும் விஞ்ஞானிகளால் மேற்கொள்ளப்பட்டே வருகின்றன. எல்லாவற்றிக்கு மேலாக நாம் வணங்கும் சில கடவுள்கள் கூட ஏலியன்கள் என்று கூறப்பட்டுள்ளமை ஆச்சர்யத்தின் உச்சமே.



தற்காலத்தில் காணப்பட்ட பறக்கும் தட்டுகளும் கூட மின்னலின் பாதையில் பல முறை குறுக்கிட்டதாக சான்றுகள் உண்டு. மனித நாகரிகம் தொடங்கும் முன்னரே இவர்கள் தோன்றி உள்ளனர் என்றால், இவர்கள் தோன்றியது எப்போது? பூமியை போல பிற கிரகளுக்கும் இவர்கள் செல்கின்றனரா ? யார் இவர்கள் ? கடவுள்கள் இவர்கள் தானா ? இவற்றில் எதற்கும் இன்றைய அறிவியல் அறிஞர்களிடம் துளி அளவும் பதில் இல்லை என்பதே நிதர்சனம். நாம் அன்றாடம் பார்த்து ரசிக்கும் அந்த அழகிய வான்வெளியில் பறந்து கிடைக்கும் பல ஆச்சர்யங்களில் இவையும் ஒன்று.

க.பானுதீபன்
ஊடகக்கற்கைகள் துறை
யாழ். பல்கலைக்கழகம்

# என் இதயம் எழுதும் சொல்



மாயா

10

ஆதி, தனது தம்பி ஷ்யாமை கடத்தி வைத்திருந்த இடத்தை பார்வையிட சென்றான். அந்த அறையின் வடிவமும், அதன் இருட்டும் அச்சிறுவனின் மனதை ஏதோ செய்ய தான் தனது தம்பிக்கு இழைத்தது பெரும் பாவம் எனத்தோன்ற தோன்ற அப்படியே மயங்கிச் சரிந்தான். அவனை அழைத்துவந்த காவலாளிகள் பதறி சென்று அவனை வாகனத்தில் ஏற்றி வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர். அவன் செய்தது மிகப்பெரிய பாவம் என்று ஆழப் பதிந்ததால் அவனது நினைவுகளில் தான் ஆதி என்ற விம்பம் அழிந்து ஷ்யாம் என்ற விம்பம் ஆழப்பதிந்தது. அவன் தன்னை ஷ்யாமாக எண்ணத் தொடங்கியதாலும் அதை மாற்றுவது அவனது உயிருக்கே ஆபத்து என்பதாலும் ஷ்யாம் ஆதியாகவும் ஆதி ஷ்யாமாகவும் அதன் பின்னர் சமூகத்திற்கு அறிவிக்கப்பட்டனர்.

அன்றிலிருந்து தான் செய்யாத தவறுக்கும் தனது அண்ணனின் உடல்நிலை கருதி அவனிடம் வசவுகளை வாங்குவது ஷ்யாம் இன்றைய ஆதிக்கு பழக்கமானது. ஆனால் அவனது துன்பத்தை காண சகிக்காத அவனின் பெற்றோர் ஆதியை (இனி ஆதியாக இன்றைய ஆதி விளிக்கப்படுவான்) வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்தனர்.

ஆதியாக இருந்தால் என்ன ஷ்யாமாக இருந்தால் என்ன ஆராதனாவை அவன் மறக்கவே இல்லை. மறக்க முயலவும் இல்லை. அதன் காரணமாக கம்பனி பொறுப்பை தந்தை அவனுக்கு அளித்தவுடனே ஆராதனாவை அவனுக்கு தெரிந்த விரிவுரையாளரின் உதவியுடன் தனது ஆபிஸிலே இணைய வைத்தான். சிறுவயதிலேயே நிறைய நிறையக் கண்டுவிட்டதாலோ என்னவோ ஆதிக்கு தனது உணர்வுகளை வெளிக்காட்ட வருவது இல்லை. ஆயினும் ஆராதனா முன்னிலையில் தனது இறுக்கங்கள் நீங்குவதை மட்டும் உணர்ந்துள்ளான்.

அதேநேரம் தனது அறையில் கட்டிலில் இருந்தவாறு யோசித்துக்கொண்டிருந்த ஆராதனாவுக்கு ஷ்யாம் என்ற பெயர் சிறுவயதில் கடத்தல் இரண்டும் பொருந்திப்போவது மகிழ்ச்சியை தந்தாலும், ஏதோ ஒரு விதத்தில் ஆதி தான் அவளது மனதைப் பாதித்துக்கொண்டு இருந்தான். எப்படிக்கண்டு அறிவது என்று தெரியாமல் குழம்பிக்கொண்டு இருந்தபோது ஆதியின் தாயாரிடம் இருந்து ஆராதனாவுக்கு அழைப்பு வந்தது.

எல்லோரும் ஆண்களே வீட்டில் இருப்பதால் தனக்கு ஒரு விழாவிற்கு ஆடையை தேர்ந்து எடுத்து தருமாறு அவர் கேட்டுக்கொள்ளவும் ஆராதனாவும் வருவதாக வாக்களித்தாள். இதனிடையே ஒரு பூங்கொத்தை கையில் வைத்துக்கொண்டு பிரம்மை பிடித்து போய் இருந்த தோழி அவள் கண்ணுக்கு படவே இல்லை. நிலாவிடம் சொல்லிக்கொண்டு வெளியேறி ஆதி வீட்டுக்கு சென்ற ஆராதனாவின் கண்கள் தன்னை அறியாமலே உன்னிப்பாக வீட்டில் இருக்கும் அனைத்தையும் ஆராயத் தொடங்கின.

உள்ளே நுழைந்ததுமே சோபாவின் அருகே வைக்கப்பட்டு இருந்த குடும்பப் படத்தில் அவளது கண்கள் பதிந்து சாசர் போல விரிந்தது. இவ்வளவு நாள் எப்படி இதனைக் கவனிக்காமல் இருந்தாள் என்றே தெரியவில்லை. ஷ்யாம் மற்றும் ஆதி இருவருக்கும் அவ்வளவு பெரிய உயரம் நிறம் வித்தியாசம் எதுவும் இல்லை. ஆனால் ஷ்யாமின் கண்களில் இருக்கும் அந்த தீட்ஷன்யம் ஆதியின் கண்களில் இல்லை என்றே தோன்றியது. அது இப்போது இருக்கும் ஆதியிடம்

நிறைய இருப்பதாகவும் தோன்றியது. அவள் அப்படியே அதிர்ச்சியாகி நிற்கவும் ஆதியின் தாயார் உள்ளே வந்தார்.

"என்ன ஆராதனா?"
என்று அவர் விளிக்கவும் புகைப்படத்தை விட்டு கண்களை நகர்த்தாமலே
"ஷ்யாம்!"
என்று கூறவும் ஆதியின் தாயாரும் அந்த படத்தினை நோக்கி பார்வையை திருப்பினார். அவரின் முகம் கனிந்து போனது. ஆராதனா சிறு வயது புகைப்படத்தை காட்ட அதன் அருகிலே இருந்த இருவரும் வளர்ந்த பின்னர் எடுத்த புகைப்படத்தை தூக்கி தடவியவர்

எவ்வளவு அழகாக இருக்கிறான் என்னோட ஷ்யாம். அதுவும் அந்த சிவப்பு டீஷர்ட் என்றால் அவனுக்கு உயிர்

என்று கூறி அந்த புகைப்படத்தை தூக்கி தடவியவரை அதே அதிர்ச்சி பார்வையுடன் நோக்கிக் கொண்டு இருந்தாள் ஆராதனா! ஏன் எனில் அந்த புகைப்படத்தில் சிவப்பு நிற டீஷர்ட்டை அணிந்து இருந்தவன் ஆதி! அவளுக்கு தலையை சுற்றும் போல இருக்கவும் தலையை பற்றிய படியே தொப்பென்று சோபாவில் அமர்ந்தாள். அவள் அமரவும் தன்னிலை திரும்பியவர் புகைப்படத்தை சோபாவில் போட்டுவிட்டு ஆராதனாவை நெருங்கி

"ஆராதனா! என்ன? என்ன செய்யுது?"
என்று கேட்டு பதறவும் அவரது கைகளைப் பற்றி கண்ணில் ஒற்றிக்கொண்டவளின் கண்களில் இரு துளிகள் வழிந்து அவரது கைகளை நனைத்தது.
அவளது கண்ணீரைக் கண்டதும் பதறியவர்

"என்ன ஆராதனா?" என்று பயத்துடன் கேட்கவும் "ஆதி சார் அ நீங்க ஷ்யாம் சொன்னீங்க"

என்று அழுகையினூடே விளித்தாள். அவள் கூறியதைக் கேட்டதும் அதிர்ந்து போனவரின் முகம் அங்கே வந்து நின்ற ஷ்யாமைக் கண்டவுடன் இன்னும் வெளுறியது.

இதயம் துடிக்கும்...

# குறுக்கெழுத்துப்போட்டி — 07

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 வி | 2 ரு | 3 ந் | தோ | 4 ம் | 5 ப | ல் | |
| 6 ர | ச | னை | | 7 ஒ | டு | | 8 தி |
| 9 த | கு | தி | | | 10 கை | 11 ங் | ம |
| ம் | | 12 ப | 13 ல் | ல | க் | கு | |
| | | 14 து | ணி | | | 15 ச | 16 தி |
| 17 ஆ | 18 று | | 19 அ | 20 தி | 21 தி | | ங் |
| 22 ன் | நா | | | 23 தி | ட | த் | க |
| 24 மா | ற் | ற | ம் | | ல் | | ள் |

## பரிசுக்குரியவர்

நிவேதிகா நித்தியானந்தம்
1ஆம் வருடம்
கலைப்பீடம்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | 5 | ■ | 6 |
| 7 | | | ■ | 8 | | 9 | |
| 10 | | | 11 | | ■ | | ■ |
| | ■ | 12 | | ■ | 13 | | 14 |
| ■ | 15 | ■ | 16 | 17 | | | |
| 18 | | ■ | 19 | | | | ■ |
| 20 | | 21 | | ■ | 22 | | 23 |
| 24 | | | ■ | 25 | | ■ | |




## இடமிருந்து வலம்

*1- சுருண்ட கூந்தல் கொண்ட பெண்ணினைப்பற்றிய பெருங்காப்பியம் .*
*7- அகத்தில் இருக்கும் இதனை முகத்தில் காணலாம் என்பர். (குழம்பி)*
*8- நிலையில்லாத உள்ளத்தில் தோன்றும் திடீர் ஆசையை இப்படி அழைப்பர்.*
*10- இறைவனிற்கு தினமும் சொல்லப்படுவது. (குழம்பி)*
*12- தன்மை இடப்பெயர் ஒன்று.(திரும்பி)*
*13- எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று பாவேந்தர் முழங்க வைத்த இசைக்கருவி*
*16- தீப ஒளியில் மின்னுகின்ற மாதம் (குழம்பி)*
*18- ஒன்றை இரண்டாய் பிரித்தால் கிடைப்பது (திரும்பி)*
*19- அரசர்களிற்கு வழங்கப்படும் திறை (குழம்பி)*
*20- பலவாய் இருப்பவன்*
*22- தாய்க்கு பின் மகிழ்ச்சியைத் தருபவள் (திரும்பி)*
*24- இலங்கையிலுள்ள ஓர் ஆறு*
*25- பண்டைய இசைக்கருவி ஒன்று (திரும்பி)*

## மேலிருந்து கீழ்

*1- இதன் புன்னகையே உலகில் மிக அழகானது எனபர்.*
*2- பகைவர் நுழையாத வண்ணம் காவலுக்காக கட்டப்படுவது. (குழம்பி)*
*3- அரசன் தலையில் சூடுவது. (குழம்பி)*
*4- தலைமுடியை இப்படி அழைப்பர்.*
*5- பத்தையும் பறக்க வைக்க வல்லது. (தலைகீழ்)*
*6- சம்மதத்தை தெரிவிக்கும் சொல்.*
*9- அழகிற்கு அழகு சேர்க்க செய்யப்படுவது. (குழம்பி)*
*11- இறைவன் இல்லை என்ற நம்பிக்கை கொண்டவன். (குழம்பி)*
*13- அரவத்தினைக்குறிக்கும் ஒரு சொல். (குழம்பி)*
*14- சிங்கத்தின் வீடு என்றும் சொல்லலாம்.*
*15- இமாலய இராச்சியம் என அழைக்கப்படும் நாடு (குழம்பி)*
*17- தலைவனைக் குறிக்கும். (தலைகீழ்)*
*18- வசிப்பிட உரிமையை இழந்தவர்கள். (குழம்பி)*
*21- இனிய சொற்களிற்கு இதனை உவமையாக்கினார் வள்ளுவர்.*
*23- பணிப்பெண்ணை இப்படி அழைப்பர்.*

**அனுப்ப வேண்டிய.......**
மின்னஞ்சல் முகவரி :- thumi2016@gmail.com
இறுதித்திகதி :- 13.10.2020

# குடாநாட்டின் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கான உபாயமுறைகள் 8

அதிரன்

குடாநாட்டின் சுற்றுலாத்துறையினை விருத்தி செய்வதற்கான உத்திகள்
இலங்கையின் பௌதிக, மானிட சூழலை சுற்றுலா பயணிகளின் கவர்ச்சிக்கு இலகுவாக உள்ளாக்கலாம். சிறிய நாடாகிய எமது நாட்டில் காணப்படும் பௌதீக, சூழல் பல்வகைமையை உல்லாசப் பயணிகளுக்கு கொண்டு செல்லல் இலகுவானது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் சுற்றுலாத்துறையினை விருத்திசெய்வதற்கான உத்திகளாகப் பின்வரும் விடங்களை முன்னிலைப்படுத்த முடியும்.

### பாரம்பரியம் சார் இடங்களை முக்கியத்துவமளித்து முன்னேற்றுதல்

யாழ்ப்பாணம் வாரலாற்று ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த தமிழ் இராசதானிகளின் தலைநகரமாக வியங்கிய காலத்தில் பல்வேறுபட்ட வரலாற்று அடையாளங்கள் தேவையின் நிமித்தம் அமைக்கப்பட்டிருந்தன. அந்த வகையில் யாழ்ப்பாணக்கோட்டை, மந்திரிமனை, ஜமுனா ஏரி முதலிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை அவற்றின் வரலாற்று மரபுகள் அடையாளங்களின் புனிதத் தன்மை பாதிப்படையாதவாறு பேணிப் பாதுகாப்பதுடன் சுற்றுலாத்துறை மூலம் வருமானம் ஈட்டுகின்ற பகுதிகளாக மாற்றுவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். தமிழரின் வரலாற்றினையும் வரலாற்றுத் தொன்மங்களையும் அனைத்துத் தரப்பினருக்கும் ஊடுகடத்தும் மார்க்கமாகச் சுற்றுலாத் துறையினைக் கையாண்டு எம் மக்களிடையேயும் விழிப்புணர்வொன்றினை ஏற்படுத்த வேண்டும்.





### கடற்கரைகளின் தரத்தினை முன்னேற்றுதல்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாக் கடற்கரைகளாக கசூரினா, சாட்டி, மூர்க்கம், காங்கேசன்துறை முதலியன சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்கு ஏற்ற இடமாக சகல வசதிகளுடன் கூடிய இடமாக அபிவிருத்தி செய்ய வேண்டும். யாழ்ப்பாணத்தில் காணப்படும் எந்தவொரு கடற்கரையும் சுற்றுலாத் தளமாக அறிவிக்கப்படக்கூடிய தரத்திலோ அல்லது வசதிகளுடனோ இதுவரை விருத்தி செய்யப்படவில்லை. யாழ்ப்பாணம் பண்ணைக் கடற்கரை அபிவிருத்தி செய்யப்பட்டாலும் சுற்றுலா நடவடிக்கைகளை முன்னெடுக்கக்கூடிய தரத்துடன் அபிவிருத்திசெய்யப்படவில்லை.

### மக்களிடையே சுற்றுலா பற்றிய எண்ணப்பாட்டினைத் தூண்டுதல்

குடாநாட்டில் குறுகிய காலத்தில் குறைந்த செலவில் அதிக காலம் ஓய்வாக கழிப்பதற்கு பொருத்தமான சூழல் உண்டு என்பதை பிரச்சாரம் செய்தல் அவசியம். யாழ் குடாநாட்டினைப் பொறுத்த வரையில் செலவு குறைந்த சுற்றுலா முறையே அதிகம் காணப்படுகின்றது. இதனை இயன்ற வரை அனைத்துத் தரப்பினருக்கும் பாதிப்பு இல்லாதவாறு மாற்றியமைத்து அனைவரும் உச்சப் பயன்பெறும் வகையில் மாற்றியமைக்க வேண்டும். ஏனைய உல்லாசப்பிரயாண பிரதேசங்களுக்கு இணையாக இங்கு காணப்படும் விசேட தன்மை குறித்து வெளிநாட்டு பயணிகளுக்கு பரந்தளவில் அறியச்செய்தல் வேண்டும். இதற்கேற்ப யாழ் குடா விசேடமான உல்லாச பயண வலயமாக பிரசாரம் செய்தல் அவசியமாகும்.



### தங்குமிட வசதிகளை விருத்தி செய்தல்

உல்லாசப்பயணிகளுக்கு இலகுவாக இருப்பதற்காக தங்குமிட வசதியினை ஏற்படுத்திக் கொடுத்தல் முக்கியத்துவம் பெறுகின்றது. அதனை விட சுற்றாடலுடன் இணைந்த உல்லாசப் பயணிகளுக்காக அவர்கள் கேட்டுக் கொள்கின்ற தங்குமிட வசதியினை செய்து கொடுத்தல் முக்கியத்துவம் ஆகும். குடாநாட்டில் காணப்படுகின்ற அறைகள் அல்லது விடுதிகள் எல்லா மட்டத்தினரும் தங்குவதற்கு ஏற்ற விதத்தில் தரம்பிரித்து அமைக்கப்பட்டால் சுற்றுலாப் பயணிகளின் பணம் மீதப்படுத்தப்படுவதுடன் அவர்களுக்குக் திருப்தித் தன்மையையும் ஏற்படுத்துகின்றது. விடுதிகளை அமைக்கும் போது சுற்றாடலுடன் இணைந்தவாறு எல்லைப்படுத்தல். அதிக வருமானம் உல்லாசப்பயணிகளின் மூலம் பெறுவதில் அதிக அவதானிப்பை ஏற்படுத்தல்.

### சூழல் சார் சுற்றுலாவினை முன்னேற்றுதல்

விசேடமாக சுற்றாடலுடன் இணைந்த உல்லாசப்பயணிகள் அடிப்படை வசதிகள், கடற்கரையோரத்தினை பார்வையிடுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல். பறவைகள், போன்றவற்றை பார்வையிடல் சுற்றாடலை பாதிக்காத வகையில் வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல் பிரதான அம்சமாகும். உல்லாசப்பயணிகளின் தங்குமிடவசதிகளுக்குப் புறம்பாக அவர்களது பயணிகளின் போக்குவரத்தின் போது சந்தோசமாக ஓய்வினை கழிப்பதற்கு அவசியமான ஏனைய விளையாட்டு வினோத நடவடிக்கைகளும் போன்ற வசதிகளை ஏற்படுத்தல்.

### போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தல்

உல்லாசப்பயணிகளுக்குத் தேவையான போக்குவரத்து வசதிகள், விமானம், பெருந்தெரு, புகையிரதம் வேறு போக்குவரத்து ஊடகங்கள் பயன்படுத்தும் போது வசதிகளை மேலும் அதிகரித்தல். இலங்கையின் எந்தவொரு பகுதிக்கும் ஒரே நாளில் சென்றுவர முடியுமாக இருந்தாலும் போக்குவரத்து மார்க்கங்கள் மற்றும் போக்குவரத்து சாதனங்களின் தரம் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்துவது அவசியமாகும். குடாநாட்டினைப் பொறுத்தவரை தனியார் மற்றும் அரசு பேருந்து சேவைகள் கணிசமாகக் காணப்பட்டாலும் சில பகுதிகளுக்குரிய போக்குவரத்து வசதிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணப்படுகின்றது. இதனை விட சில

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தனியான வாகனத்தினையே அதிகம் விரும்புகின்ற தன்மையும் காணப்படுகின்றது. எனவே சகல தரப்பினரையும் திருப்திப்படுத்தக்கூடிய வகையில் விருத்தி செய்வது அவசியமாகும்.

### பயிற்சி வசதிகளை மேம்படுத்தல்

உல்லாசப்பயணிகளின் சேவைகளுக்காக அவசியமான ஊழியர்களுக்கு முறையான பயிற்சியை அளித்தல் அவசியமாகும். சில இடங்களில் தற்காலத்தில் உல்லாசப்பயணிகளை வழிநடத்துபவர்கள் தவறான முறையில் செயற்பாடுகளை மேற்கொண்டமையால் உல்லாசப்பயணிகள் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டுகின்றனர். பட்டம் மற்றும் டிப்ளோமா கற்கைநெறிகளை வழங்கக் கூடிய கல்விநிறுவனங்களை உருவாக்கி மாணவர்களை உள்வாங்குவதன் மூலம் சிறந்த சுற்றுலா வழிகாட்டிகளை உருவாக்க முடியும். இதன் மூலம் அவர்களுக்குரிய வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தி வரமான மார்க்கங்களைத் திறந்துவிட முடியும்.

### கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தல்

தற்காலத்தில் உல்லாசப்பயணத்துறை தொடர்பாக ஏற்பட்டுள்ள கொள்கைகள் நன்மை தரக்கூடியதாக காணப்படாமையினால் சரியான அறிவூட்டல் வழங்கப்படல். அதனூடாக உல்லாசப் பயணத்துறை தொடர்பான பிரச்சினைகளை குறைக்க முடியும்.

### தேசிய மட்டத்திலான ஆதரவினைப் பெற்றுக்கொள்ளல்

எங்களுடைய நாட்டிற்கு அந்நிய செலாவணியினை இலகுவாக பெற்றுக் கொள்ளக்கூடிய வளமான உல்லாசப்பயணத்துறையினை விருத்தி செய்து தேசிய மட்டத்தில் ஆதரவினை பெறுவதற்கான வேலைத்திட்டங்களை ஒழுங்கமைத்தல்.

## குட்டிக்கதை

ஒரு கம்பளிப் புழு தன் உடலில் சுரக்கும் திரவத்தினால், தன்னைச் சுற்றிக் கூடு அமைத்துக் கொண்டது. முதலில், கூடு அதற்கு பாதுகாப்பானதாகத் தோன்றியது. சிறிது நாட்களிலேயே அந்த எண்ணம் மாறிவிட்டது. 'அடடா நாம் சிறைப்பட்டிருக்கிறோமே' என்று வருந்தியது. ஐயோ! நான் ஏன் இப்படி செய்து கொண்டுவிட்டேன்? என்று அது அழுது புலம்பியது. யாராவது என் உதவிக்கு வாருங்கள்!' என்று உரத்த குரலில் முறையிட்டது.

ஆனால், யாரும் உதவிக்கு வரவில்லை. ஏன்? அந்தக் குரல், அது ஏற்படுத்திக் கொண்ட சிறைக்குள்ளேயே முடங்கிவிட்டது. அதன்பிறகு, நாமேதான் நம் பிரச்னையைத் தீர்க்க வேண்டும் எனத் தீர்மானித்தது அந்தப் புழு. கஷ்டப்பட்டுத் தன் கூட்டிலிருந்து வெளிவர முயன்றது. மிகுந்த போராட்டத்துடன், தன் முயற்சியில் வென்று, கூட்டை விட்டு வெளிவந்தபோது, என்ன ஆச்சர்யம்! அது அழகான வண்ணத்துப்பூச்சியாக மாறியிருந்தது.

கூட்டுக்குள்ளேயே அது முடங்கியிருந்தால், அதன் வாழ்வு அப்படியே முடிந்திருக்கும். அதை விட்டு வெறியேற முயன்றதால்தான், அது வசீகரமானது.

கம்பளிப் புழுவின் கதை, நமக்கும் பொருந்தும். உண்டாகியுள்ள பந்தத்தினால் நாம் துக்கப்படுகிறோம் ஆனால், வருந்தி அழுவதால் என்ன பயன்? யாரும் நம் உதவிக்கு வரமாட்டார்கள். இதிலிருந்து மீளுவதற்கு நாமேதான் முயற்சி பண்ண வேண்டும்.

# திரைத்தமிழ்

**கருத்து :** முடிசார்ந்த மன்னரும் முடிவில் ஓர் பிடி சாம்பல்
**திரைப்படம் :** ஹரிச்சந்திரா
**எழுதியவர் :** உதய குமார், வேலன்
**காணொளி இணைப்பு :**
https://www.youtube.com/watch?v=Sj-BbU4Gbqo

மாடுண்டு, கன்றுண்டு, மக்கள் உண்டென்று மகிழ்ந்திருந்த மனிதா!

விம்மி அழுத மனையாள் வீதியோடு நின்று விட்டாள்.

சுமந்து வந்த சுற்றம் சுடலையோடு திரும்பி விட்டார்.

இப்போது உனக்கு பேர் எங்கே? பெரிய தனம் எங்கே? ஊர் எங்கே? உறவு எங்கே? நீ எரிந்து விட்ட சாம்பல்.

இருந்த போது சிம்மாசனம். இறந்த பிறகும் ஒரு மேடையா? முடிசார்ந்த மன்னரும் முடிவில் ஓர் பிடி சாம்பல் ஆவர்.

வாழ்வு சதம் என்று ஆசைக்கயிற்றிலாடிய பம்பரமே! இதோ உனது ஆட்டம் ஓய்ந்து விட்டது பார். நின் கணவன் புது பதுமை வைத்து விளையாட போகிறான்.

இளம் குருத்தே! விதி என்ற சூரைக்காற்று சுழன்றடிக்கும் போது, பூ என்றும், பிஞ்சு என்றும், காய் என்றும், கனி என்றும் கருதுவதில்லை.

பந்தம் என்ற விருட்சத்தை பற்றிக்கொண்டிருந்த பாசம் என்ற கிழ உடம்பே! நீ மண்ணிலே பிறந்தபோது என்ன கொண்டு வந்தாய்? இதோ நெருப்பிலே எரிகிற போது என்ன கொண்டு போகிறாய்?

ஏன் சிரிக்கிறீர்கள்?
செத்த பிணங்களை பார்த்து இன்னொருநாள் சாகும் பிணம் சித்தாந்தம் பேசுகிறதே என்றா?
சிரியுங்கள். நன்றாக சிரியுங்கள்.
மாநிலத்தை வென்றவர் உண்டு. மாயையை வென்றவர் உண்டு. ஆனால் மரணத்தை வென்றவர் இல்லை. இன்று உலகத்தில் வழிப்போக்கனை போல் வந்து போகும் சில நாட்களில் நல்லதையே செய் பொறுப்போடும் இலட்சியத்தோடும் வாழ்ந்து போக வேண்டும்.

செய்தீர்களா? சிந்தித்தீர்களா?

மித்ரசகி



இந்த பகுதியில் தமிழ் சினிமாவில் இடம்பெற்ற கருத்துச்செறிவான வசனங்கள் இடம்பெற உள்ளன. நீங்களும் இப்பகுதியில் எழுதலாம். நீங்கள் ரசித்த தரமான தமிழ் சினிமாவில் இடம்பெற்ற வசன நடைகளை எமக்கு தட்டச்சு செய்து அல்லது எழுதி அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி :-
thumi2016@gmail.com

# தமிழர்களின் எதிர்காலம்?


எம் மண்ணில் கடந்த முப்பதாண்டு கால போர் ஈழத்தமிழர்களின் சிந்தனை ஆக்கங்களை சகல துறைகளிலும் சிதைத்துள்ளது. ஏதொவொரு வகையில் இன்னொன்றை சார்ந்து வாழ பழகிக்கொண்டுள்ளது ஈழத்தமிழ் சமூகம். 2009ஆம் ஆண்டு ஆயுதப்போராட்ட மொனிப்புக்கு பின்னரான 11ஆண்டு காலப்பகுதியிலும் கூட தமிழ் சமூகம் தனக்கான பாதையை கட்டமைக்க தவறி விட்டது. யுத்த அழிவு என்ற பின்புலத்தில் புலம்பெயர் உறவுகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் கிடைக்கப்பெற்ற உதவிகளால் மேலும் மேலும் தங்கி வாழ்வதே இயல்பு என்ற சுழிக்குள் சிக்குண்டுள்ளது. அதனடிப்படையிலேயே குறித்த தேடலும் ஈழத்தமிழ் சமூகத்தின் பொருளாதார போக்கின் எதிர்காலத்தை தேடுவதாக அமையப்பெற்றுள்ளது.

யுத்தம் என்ற அழிவிலிருந்து ஈழத்தமிழரை மீட்க 2009ஆம் ஆண்டு தொடக்கம் தன்னார்வ தொண்டு நிறுவனங்களும், புலம்பெயர் உறவுகளும் பெருந்தொகையான நிதியை இலங்கையின் வடக்கு – கிழக்கில் அள்ளி வீசிவருகிறார்கள். நிச்சயம் குறுகிய கால இடைவெளியில் யுத்த வடுக்கள் துடைக்கப்பட்டு தமிழ் சமூகம் புதிய மாற்றத்தை பெற்றுள்ளது தான். ஆயினும் மறுதலையாய் அதன் பக்க விளைவாய் தமிழ் சமூகத்தை பொருளாதார ரீதியில் தங்கி வாழவும் வழிசெய்துள்ளது.

இன்று தமிழர்கள் ஏதும் இடரெனில் வாழ்வாதார உதவி அல்லது கற்றலுக்கான உதவி புலம்பெயர் சமூகத்திடமிருந்து கிடைக்கும் என்ற தைரியத்தில் சுய முயற்சிகளை கைவிட்டு செல்கிறார்கள். மிகவும் சோம்பலான புதிய சிந்தனைக்கான அவாவற்ற சமூகம் ஒன்று உருவாக்கம் பெற்று வருகிறது. இது நீண்டகாலத்தில் தமிழர்களை மீள வறுமைக்குள் கொண்டு செல்லக்கூடியதாகும். எனிலும் அந்நேரத்தில் இன்று போல் புலம்பெயர் தேசங்களிலிருந்து பண மழை தூறல் கூட கிட்டாது என்பது நிதர்சனமாகும்.

இன்று போர்க்கால துயரங்களை அனுபவித்த தலைமுறையும் மற்றும் சமகாலத்தில் புலம்பெயர்ந்து சென்றவர்களும் புலம்பெயர் தேசங்களில் வாழ்வதாலேயே உதவிக்கு பண மழை கொட்டுகிறது. எனிலும் புலத்தில் வாழும் அடுத்த தலைமுறைக்கு தமிழே சரியாக தெரியாத சூழலில் தாயகத்தில் வாழும் உறவுகளை தெரிந்திருக்க கூடிய





வாய்ப்பு அறவே காணப்படப்போதில்லை. ஆதலால் இன்றைய தலைமுறை மூலம் தொடர்ச்சியாக உதவிகள் கிடைப்பது போன்ற சூழல் எதிர்கால தலைமுறைகளிடமிருந்து கிடைக்கப்போவதில்லை.

ஆக ஈழத்தமிழர்கள் தமக்கான சரியான பொருளாதார கொள்கையை இன்று கிடைக்கும் உதவிகளிலிருந்து கட்டமைக்க வேண்டும். புலத்திலிருந்து உதவிடுவோரும் உதவியாக பணத்தை அள்ளி வீசாது புதிய தொழில்முயற்சிகளுக்கு நிதியை அளித்து தாயகத்தில் வாழ்வோரை சுயமாய் இயங்க வழி ஏற்படுத்த வேண்டும்.

தாயத்தில் மனித வளமும் இடவளமும் அதிகமாக காணப்படுகிற போதும் முதலீடே இங்கு பற்றாக்குறையாக காணப்படுகிறது. உதவியாக நிலையற்ற அபிவிருத்தியாக வடக்கு – கிழக்கிற்கு புலம்பெயர் உறவுகளால் அளிக்கப்படும் பண உதவிகளை முதலீடாக மாற்றி மேற்கொள்கையில் அது நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடியதாகும்.

வன்னி நிலப்பரப்பில் இன்று முதலீடுசார் அபிவிருத்திகள் சில மேற்கொள்ளப்படினும், அம்முதலீடுகளை பல்தேசிய நிறுவனங்களே மேற்கொண்டு வருகின்றது. பல்தேசிய நிறுவனங்களின் கொள்ளை இலாப பண்பினால், முதலீடு வன்னியில் அபிவிருத்தியாகிற போதிலும் தொழிலாளிகள் முழுமையான பயனை பெற முடியாத அவலச்சூழல் காணப்படுகிறது.

மேலும் தொழில்வாய்ப்பற்ற நிலையில் எல்லையோர கிராமங்களை விட்டு தமிழ் மக்கள் அகன்று செல்வதனால், வடக்கு – கிழக்கில் தமிழர்களின் நிலத்தொடர்ச்சியும் சிதைக்கப்படுகிறது. இதனை சீர்செய்ய எல்லையோர கிராமங்களை மையப்படுத்தி தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்துவதே சரியான உபாயமாக காணப்படும். இலாபத்தை மாத்திரம் குறிக்கோளாக கொண்டு முதலீடுகளை மேற்கொள்வோர் தமிழர்களின் இருப்பு தொடர்பில் கரிசணை செலுத்தப்போவதில்லை. ஆதலால் தமிழ் மக்களின் வறுமையை போக்க வாழ்வாதார உதவியாகவும், கற்றல் உதவியாகவும் பணத்தை இறைக்கும் கொடையாளர்கள் தமிழர்களின் நிலைத்த அபிவிருத்தியை கருத்திற்கொண்டு தொழில்சார் முதலீடுகளை ஈழத்தில் தொடங்குகையிலேயே, தமிழ் மக்கள் நிம்மதியான வாழ்வை எதிர்காலத்திலும் வாழ வழி ஏற்படும்.

சத்ரியன்




ஜீவா ஷஜீவனின்

# சிங்கிரித்தலைவன்

ஆட்சி 11

## மகாநாமர் கடத்தப்பட்டார்!

தாதுசேனரை ஈட்டி தாக்கி முழுமையாக ஒரு நாள் கடந்துவிட்டது!
முகலன், சதிகாரனிடம் இருந்து தளபதி மூலமாகத் தனக்குக் கிடைத்த ஓலையால் மனமுடைந்து போனான். வெளியூர் வைத்தியர்களும் வரவழைக்கப்பட்டு விசத்தை முறிப்பதற்கான மருந்துகள் தயாரிக்கும் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்தது...
இயன்றவரை மன்னருக்கு இவ்விடையம் குறித்து எதுவும் கூறக்கூடாதென்றும், சாதாரண காயத்திற்கு வைத்தியம் நடைபெறுவதைப்போல வைத்தியம் மேற்கொள்ள வேண்டும் என்றும் வைத்தியர்களுக்கும் பணியாளர்களுக்கும் முகலன் உத்தரவிட்டிருந்தான்.
இதற்கிடையில் கண்டி போயிருந்த மகாநாமருக்கு, நடைபெற்ற நிகழ்வுகளை விரிவான ஓலை மூலம் முகலன் அறிவித்து அனுராதபுரம் திரும்பும்படி வேண்டிக்கொண்டான். இப்போதைக்கு முகலனின் நம்பிக்கைக்கு உரிய ஒரேயொருவர் பேரனார் மகாநாமர் மட்டும் தான்.



புதிய அரசனாக முகலனின் பெயரை அரச வழக்கப்படி அறிவிப்பதற்காகவும் முடிசூட்டுவிழாவின் ஏற்பாடுகளை மேற்கொள்ளவும், பிராமணர்களை உரிய முறையில் அழைப்பதற்காகவும் மிக விரைவாகச் செயற்படுவதாக மகாநாமார் தானே பணியில் ஈடுபட்டிருந்தார்.
பௌத்தம் ஆட்சிக்குரிய மாதமாக இருந்தாலும், புத்தர் பௌத்தர்களின் வழிகாட்டியாகவும் வணக்கத்துக்குரியவராகவும் இருந்தாலும், சைவமும் வைதீகமும் பௌத்த வழிபாட்டு அம்சங்களோடு இரண்டறக்கலந்திருந்தது. இன்னும் வெளிப்படையாக சொல்லப்போனால், பௌத்தர்கள் தமக்கு வரமும் வாழ்வும் வேண்டி சிவன்,விஷ்ணு,இந்திரன்,அம்மன் போன்ற தெய்வங்களை வணங்கி வந்தனர். அரண்மனையில் நடக்கும் சடங்குகள் வைதீக முறைப்படி மேற்கொள்ளப்பட்டன. பௌத்த துறவிகளும் பிராமணர்களும் இணைந்து அவற்றை நடாத்தி வைத்ததாக மஹாவம்சம் கூறுகிறது. இந்த செல்வாக்கு இலங்கை மன்னர்களின் இந்திய திருமணத் தொடர்புகளால் மேலும் வலுப்பெற்றுப் போனது.

'பிள்ளைக்கு வேண்டிய ஜாதகருமம் முதலான சடங்குகளை வேத விதிப்படி அரசன் செய்வித்தான். அதன் பின்னர் புரோகிதரையும் , அங்க லட்ஷணங்களை ஆராயும் விற்பன்னரான பிராமணர் பிறரையும் வரவழைத்து, அவர்களுக்குரிய வழமையான மரியாதைகளோடு உபசாரஞ் செய்தான் . பிள்ளையினுடைய அங்கலடிணங்களின் குணநலன்களை விளக்குமாறு அவர்களை வேண்டினான் , சடங்குகளைப் பற்றி நன்கறிந்தவனாகிய மன்னன் காணவேதனம் , அன்னப்பிராசனம்

ஆகிய கருமங்களை வழமைப்படியே செய்வித்தான்'-*சூளவம்சம் -62:33*

இதனடிப்படையில் தான் மகாநாமரின் பயணமும் அமைந்திருந்தது.
அனுபவமும் வயதும் குறைவான முகலன் அடுத்து என்ன செய்வது என்று சிந்திப்பதும், அமைச்சர்களோடும் வைத்தியர்களோடும் ஆலோசிப்பதுமாக இயன்றவரை அரண்மனையின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதுமாக சுழன்றுகொண்டிருந்தான். அரண்மனையின் மேற்கு கொத்தளத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனித்துக்கொண்டிருந்த முகலனை மிக அவசரமாக அரண்மனை ஒற்றன் சந்திப்பதற்காக மூச்சிறைக்க ஓடிவந்து வணங்கி நின்றான்.

"ஒற்றனே அமைதிகொள்... ஏதும் அசம்பாவிதம் நடந்ததா?"

தன் இதயத்தில் எழுந்த ஆயிரம் சிந்தனைகளை அடக்கியவாறு முகலான் வினவினான்!
"மன்னிக்க வேண்டும் இளவரசே... கண்டியில் இருந்து வரும் வழியில் முதலமைச்சர் மகாநாமர் கடத்தப்பட்டார்! கிராமத்தவர்களின் வாயிலாக விடையம் அறிந்தோம்"


முகலனின் இதயத்தில் இடியொன்று இறங்கி வெடித்தது! தன் நம்பிக்கை, தன் பலம் எல்லாம் தன்னை விட்டு கண்ணெதிரே போய்கொண்டிருப்பதாக உணர்ந்து கலங்கி நின்றான். எதிர்காலம் குறித்த ஆயிரம் எண்ணங்கள் அவன் முன் நிழலாடி நீண்டன...
"இளவரசே கலங்குவதிலோ... காலம் தாழ்த்துவதிலோ பயன் ஏதும் இல்லை! விரைந்து செயற்பட்டால் நம் முதலமைச்சரை மீட்டு வரலாம்!"

ஒற்றனின் வார்த்தைகள் துக்கம் மூடி இருட்டிக்கிடந்த முகலனின் இதயத்தில் நம்பிக்கை பொறியை சுண்டியது!

"நீ விரைந்து சென்று, தளபதியை உடன் அரண்மனை திரும்ப சொல்! கொலைகாரனைத் தேடுவதிலும் பார்க்க முக்கிய பணி இங்கு உள்ளதாகச்சொல்! இது இளவரசரின் கட்டளை! இதோ முத்திரை மோதிரம்... பெற்றுக்கொள்!"

தன் மீது விழுந்த நம்பிக்கைப்பொறியை பற்றியெடுத்துத் தன்னுள் ஒரு சுவாலையை கொளுத்தினான் முகலான்!
கையில் முத்திரை மோதிரம் கிடைத்ததும் ஒற்றன் வணங்கி விரைந்து சென்றான்! ஒற்றன் கொத்தளத்தில் இருந்து கீழே இறங்க, பணிப்பெண் ஒருத்தி வந்து முகாலனை வணங்கி நின்றாள்!

"இளவரசே மாமன்னர் உங்களை விரைந்து அழைத்து வரச்சொன்னார்!"
தந்தையிடம் தற்போதைய நிலமையைச்சொல்லலாமா...? அப்படிச்சொன்னால் அவர் மேலும் பலவீனமாவரா..? ஆனாலும் இந்த விடயத்தை மறைப்பது முறையாகுமா..? என்றெல்லாம் சிந்தித்தவாறே மருத்துவ கூடத்திற்கு போனான் முகலன். தாதுசேனர் முகலனைக்கண்டதும் தன் படுக்கையில் இருந்து தள்ளாடியபடி எழுந்திருக்க முயன்றார்.



"தந்தையே... நீங்கள் உங்கள் உடலை வீணே உபாதைக்கு உள்ளாக்க வேண்டாம்... அமைதி கொள்ளுங்கள்" என்றவாறு அருகில் போன முகாலனின் தோளைப் பற்றிக்கொண்ட தாதுசேனர்,

"மகனே... மகாநாமரை மீட்டு வா... மகாநாமரை மீட்டு வா" என்றவாறு மூர்ச்சையாகி அவன் மார்பில் சரிந்தார்! பதறிப்போன முகலன், "வைத்தியரை அழையுங்கள்...!" என்று கத்தினான். அவன் குரல் கேட்க முன்னரே வாயிலில் நின்ற வைத்தியர்கள் ஓடி வந்து மன்னரைத்தாங்கிக் கொண்டு படுக்கையில் வளர்த்தினர்...

"இளவரசே... அதிக சிந்தனையால் மன்னர் மூர்ச்சையாகிவிட்டார்... நீங்கள் அச்சம் கொள்ள வேண்டாம்... நாங்கள் பார்த்துக்கொள்கின்றோம்! மகாநாமரை மீட்டு வெற்றியோடு வாருங்கள் இனியும் தாமதிப்பதில் பயனில்லை" தலைமை வைத்தியர் கூப்பிய கைகளோடு கூறினார். அவரது கைகளைப்பற்றிக்கொண்ட முகலன் நம்பிக்கை கொண்டவனாக தலையசைத்து விட்டு, மருத்துவ கூடத்தை விட்டு வெளியேறினான்!

சற்று நேரத்தில் எல்லாம் அரண்மனை வாசல் வழியாக முகலனின் தலைமையில் ஒரு படையணி குதிரைகளில் விரைந்தது! அந்தப்படை ராஜவீதியைக் கடக்கும் வரையில் மேல் கொத்தளத்தில் நின்றவாறு அதனை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் தளபதி மீகாரன்....!!

**படை திரும்பும்...**



## அறங்கள் செய்வோம்

யாழ்ப்பாணம் மல்லாகம் பகுதியில் வசித்து வரும் 5 பிள்ளைகளின் தாயான நலிவுற்ற, பெண்ணுக்கு, மூன்றாவது கட்டமாக, சத்து உணவு பொதியும், அவரின் பிள்ளைகளுக்குப் புத்தகப்பைகளும் துமியால் வழங்கப்பட்டது.




ஏற்கனவே சுவாசக்கோளாறால், பாதிக்கப்பட்ட குறித்த பெண்ணுக்கு கட்டில் மற்றும் மெத்தை படுக்கை உதவிகள் குறித்த உதவி திட்ட வழங்குநர்,அனுசூயா தில்லைநடராஜா அவர்களால், நிலாஷ் பவுன்டேசன் ஒருங்கிணைப்பில் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பலிபீடம்

சாரங்கன்

பிரசவமாகா கவிதைகள் என்னுள் பிரசவம்
நிகழ்ந்தாதா
முழுமதியை
முதிர்கன்னியியை
பிரசவித்தல் எளிது
இங்கோர் நிசப்பத வெளி
மேனிகள் மறையாடை
முகங்களில் துணிகள்
விண்வெளியில் மனிதர்களாய்
நீள்கால குத்தகையில் தெருக்கள்
ஏலச்சந்தையில்
கிளிகள்,சிட்டுகள்
முச்சந்தியில் முட்கம்பிகள்
பச்சைகள் நாகாஸ்த்திரம்
ஏந்துகிறது
கைகள் ஏந்துதல் வழமையாகிறது
நவீன கர்ணன்கள் செல்பீகளில்
சின்னிவிரலை கவர்கிறார்கள்
வெறிச்சோடிய வெளிகள்
வெளியாகும் சிறைகள்
தேசத்து வீரர்கள்
வெளியேற்றபடுகின்றனர்

பச்சைகள் பிளவுற்றதால்
பச்சைகள் தெருக்களில்
ராஜாங்கம்
புனிதன் வீணர்களால்
விலைபேசப்படுகிறான்
இங்கெப்படி பிரசவமாகும்
சங்கரனாரின் பிள்ளைகள்
பலிகள் இல்லையென
பலிபீட நந்திகளை தொழுகின்றனர்
இங்கே உயிர்கொலையா
மதக்கொலையா
வா
போதும்
இனி
நீ
20களில் எதுவென்று
ஆராய்........



1996 ஆம் ஆண்டு ஆறாவது கிரிக்கெட் உலகக்கிண்ணம் இந்தியா,பாகிஸ்தான் மற்றும் இலங்கை மைதானங்களில் நடைபெற்றது. இது இந்தியா,பாகிஸ்தான் நடாத்திய இரண்டாவது உலகக்கிண்ணமாகவும் இலங்கைக்கு முதலாவது உலகக்கிணமாகவும் அமைந்தது. இதற்கு முன்னரான ஐந்து உலகக்கிண்ண



1

அக்னி



# கத்துக்குட்டிகளில் இருந்து கர்ஜிக்கும் சிங்கங்களான இலங்கை
# உலகக்கிண்ணம் '96'

தொடர்களில் முதலிரண்டு தொடர்களையும் மேற்கிந்திய தீவுகள் அணியும், மூன்றாவது தொடரை இந்தியாவும், நான்காவது தொடரை ஆஸ்திரேலியாவும், ஐந்தாவது தொடரை பாகிஸ்தானும் கைப்பற்றி இருந்தன. ஆறாவது உலகக்கிண்ணம் 1996 பெப்ரவரி-மார்ச் மாதங்களில் நடைபெற தயாராக இருந்தது. வழக்கம் போல பலமான ஆஸ்திரேலியா மீதும், நடப்பு சம்பியன்கள் பாகிஸ்தான் மீதும் பெரிய எதிர்பார்ப்பு இருந்தது. இந்தியா, மேற்கிந்திய அணிகளும் அடுத்தடுத்த போட்டியாளர்களாக கருதப்பட்டன. ஆனாலும் அர்ஜுன ரணதுங்க தலைமையிலான இலங்கை அணி கிண்ணத்தை வெல்ல போகிறது என்று யாரும் நினைத்துப்பார்க்கவில்லை.



இந்த ஆறாவது உலகக்கிண்ண தொடரில் ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், நியூசிலாந்து, மேற்கிந்திய தீவுகள், சிம்பாவே என சர்வதேச கிரிக்கெட் சபையினால் டெஸ்ட் அங்கீகாரம் வழங்கப்பட்ட ஒன்பது அணிகளோடு தகுதிகாண் போட்டிகளில் பங்குபற்றி உள் நுழைந்த கென்யா, நெதர்லாந்து, ஐக்கிய அரபு ராச்சியம் என மூன்று அணிகளோடு மொத்தமாக 12 அணிகள் இரண்டு குழுக்களாக பிரிக்கப்பட்டு குழுப்போட்டிகளின் முடிவில், இரண்டு குழுக்களிலும் முதல் நான்கு இடங்களை பிடிக்கும் அணிகள் காலிறுதிப் போட்டிகளிற்கு தகுதிபெறுவதாக தொடரின் அமைப்பு அமைந்திருந்தது. இதில் இலங்கை அணி, இந்தியா,ஆஸ்திரேலியா, மேற்கிந்திய தீவுகள், சிம்பாவே, கென்யா அணிகளுடன் குழு A இல் இடம்பெற்று இருந்தது.

1996 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கை மத்திய வங்கி உள்நாட்டு யுத்தத்தால் தாக்கப்பட்டு இருந்தது. இதனால் ஆஸ்திரேலியா மற்றும் மேற்கிந்திய தீவுகள் இரண்டும் கொழும்பு பிரேமதாஸ மைதானத்தில் இடம்பெற இருந்த ஆட்டத்தில் பாதுகாப்பு காரணங்களை காட்டி பங்குபற்ற முடியாது என தெரிவித்தன. சர்வதேச கிரிக்கெட் சபை மற்றும் இலங்கை அரசாங்கம் முழுமையான பாதுகாப்பு வழங்குவதாக




தெரிவித்தும் இரண்டு அணிகளும் இலங்கையில் போட்டியில் விளையாட மறுத்து விட இலங்கை அணி இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெறுவதாக அறிவிக்கப்பட்டது. இதனால் தொடர் ஆரம்பிப்பதற்கு முன்னராகவே இலங்கை அணி நான்கு புள்ளிகளுடன் காலிறுதி வாய்ப்பை பிரகாசப்படுத்திக்கொண்டது.

அத்தோடு 1996 ஆம் ஆண்டு இலங்கை அணிக்கு அர்ஜுன ரணதுங்கவும் பயிற்சியாளர் வட்மோரும் வகுத்த திட்டம் கைக்கு மேல் பலனாக உலகக்கிண்ணத்தையே பெற்றுக்கொடுத்தது என்றாலும் மறுப்பதற்கில்லை. ஆம் வேறு ஒன்றும் இல்லை அதிரடியான இரண்டு ஆட்டக்காரர்களை முதல் 15 ஓவர்களில் அடித்தாட விட்டு வேகமாக ஓட்டங்களை குவிப்பது தான் அந்த புதிய அணுகுமுறை. தற்போது பவர் ப்ளே என களத்தடுப்பில் முதல் பத்து ஓவர்களும் இரண்டு களத்தடுப்பாளர்களே எல்லையில் களத்தடுப்பில் ஈடுபட முடியும். அதே போல அந்த காலத்தில் முதல் 15 ஓவர்களிலும் இரண்டு களத்தடுப்பாளர்களே எல்லைக்கோட்டில் களத்தடுப்பில் ஈடுபட முடியும்.

அவ்வாறு இருந்தும் அப்போது முதல் 15 ஓவர்களில் 50-75 ஓட்டங்கள் என்ற சராசரியே வழக்கமாக இருந்தது. இதனை உடைத்து அந்த ஓவர்களில் அதிகப்படியான ஓட்டங்களை குவிப்பதே இலங்கை அணியின் புதுயுக்தியாக இருந்தது. அதற்கு தகுந்த ஜோடியாக இந்த உலகக்கிண்ண தொடரின் தொடர்நாயகன் சனத் ஜெயசூரியவும், இலக்கு காப்பாளர் களுவிதாரணவும் எதிரணிகளுக்கு சிம்மசொப்பனமாக மாறி தொடர் முழுவதும் அதிரடியாக ஓட்டங்களை குவித்து இலங்கை அணிக்கு அனைத்து போட்டிகளிலும் சிறப்பான அடித்தளத்தை அமைத்துக்கொடுத்தனர்.

**புதுயுக்தியோடு கத்துக்குட்டிகளாக கருதப்பட்ட இலங்கை அணி எவ்வாறு சிங்கங்களாக மாறி எதிரணிகளை வேட்டையாடி கிண்ணத்தை வென்றது என பொறுத்தருந்து பார்க்கலாம்....**

